# வானவில்

# VAANAVIL

இதழ் 129 | புரட்டாதி 2021

ISSUE 129 | SEPTEMBER 2021


# இலங்கையில் ஆட்சி மாற்றம் நடக்குமா?




இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று நடைபெற வாய்ப்புள்ளதாக அல்லது நடைபெற வேண்டும் என்ற கருத்துப்பட சில தரப்புகள் கூறி வருகின்றன.

இந்தமுறை வழமைபோல வெளிநாட்டு ஊடகங்களோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ இதைக் கூறவில்லை. ஜே.வி.பி அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்போ கூட உள்ளூர விரும்பினாலும் அவ்வாறு கூறுவதைக் காணோம். இந்தக் கருத்தைத் தொடர்ந்து கூறி வருபவர்கள் ஐ.தே.கவிலிருந்து பிரிந்து ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரில் தனிக்கட்சியை உருவாக்கி நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் சஜித் பிரேமதாச குழுவினரே இந்தக் கருத்தைக் கூறி வருகின்றனர்.

அவர்களது இந்தக் கருத்துக்கு சில பௌத்த குருமார்கள் ஆதரவளிப்பதுடன், ஊடகங்களும் குறிப்பாகத் தமிழ் ஊடகங்களும் முக்கியத்துவம் அளித்து வருகின்றன.

ஆனால் என்ன வகையில் ஆட்சி மாற்றம் நிகழும் என சஜித் குழுவினர் கூறவில்லை.

ஆட்சி மாற்றம் நிகழ்வதானால் சில வழிமுறைகளில்தான் நிகழ முடியும்.

அதாவது, ஜனாதிபதியினதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக்காலம் முடிவடைந்து தேர்தல் நடந்தால் ஆட்சி மாற்றம் நிகழலாம்.

அல்லது ஜனாதிபதி மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து அது வெற்றி பெற்றாலும் ஆட்சி மாற்றம் நிகழலாம்.

அல்லது 1953இல் அன்றைய ஐ.தே.க. அரசுக்கு எதிராக இடதுசாரிக் கட்சிகள் மக்களை அணிதிரட்டி ஒரு மாபெரும் ஹர்த்தால் போராட்டம் நடத்தி அரசாங்கத்தைச் செயலிழக்க வைத்தது போல ஒரு முயற்சியை மேற்கொண்டாலும் ஆட்சி மாற்றம் நிகழலாம்.

அல்லது 1971 மற்று 1988 – 89 காலப்பகுதியில் ஜே.வி.பி. இயக்கம் மேற்கொண்டது போன்ற ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை நடத்தியும் ஆட்சி மாற்றம் ஒன்றை நிகழ்த்தலாம். அல்லது இராணுவத்தினர் ஒரு சதி நடவடிக்கையை நிகழ்த்தியும் ஆட்சி மாற்றம் ஒன்றைச் செய்யலாம்.

ஆனால் தற்போதைய நிலைமையில் இலங்கையில் இப்படியான நடவடிக்கைகள் எதற்குமே வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. எனவே எதிர்க்கட்சியினர் வெறுமனே ஆகாயத்தில் கோட்டை கட்டி மகிழ்கின்றனர் என்பது நிரூபணமாகிறது.

எதிர்க்கட்சியினர் இப்படியெல்லாம் பேசுவதற்கு அவர்கள் அரசாங்கத்தின் மீது வைக்கும் குற்றச்சாட்டுகள் என்ன?

ஒன்று, விலைவாசி உயர்வு.

இரண்டாவது, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு.

மூன்றாவது, கொவிட் நோயைக் கையாள்வதில் அரசாங்கத்தின் திறமையீனம்.

நான்காவது, அரசாங்கம் இராணுவமயமாகி வருவதாகவும், மக்கள் மீது அடக்குமுறையை ஏவி விடுவதாகவும் முன்வைத்துள்ள குற்றச்சாட்டு. இப்படி இன்னும் பல.

கொவிட் தொற்றுக் காரணமாக நாட்டின் அன்றாட இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளதால் நாட்டில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டு, அரசாங்கம் சுமூகமாகச் செயற்பட முடியாத ஒரு நிலை தோன்றியுள்ளது என்பது உண்மையே. இந்த நிலைமை இன்றைய அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றல்ல. சுதந்திரத்துக்குப் பின்னர் மாறிமாறி நாட்டை ஆட்சி செய்த இரண்டு முதலாளித்துவக் கட்சிகளினதும் தூரநோக்கற்றதும், நாட்டு நலன் கருதாததுமான ஆட்சிகளின் தொடர்ச்சியே இந்த நிலைமைக்குப் பிரதான காரணம். கொவிட் அதன்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ஜனாதிபதியின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் 76வது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக அமெரிக்கா சென்றுள்ளார். அப்போது அவர் ஐ.நா சபையின் பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் (Antonio Guterres) அவர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில், 19.09.2021 அன்று இடம்பெற்ற இந்த விசேட சந்திப்பில், இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை, மிகவும் நேர்மறையான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்குமென்று அன்டனியோ குட்டரெஸ் இலங்கை ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

மேலும் இச்சந்திப்பின் போது இலங்கை ஜனாதிபதி, காணாமற்போனோர் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுத்தல், அவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல், மற்றும் நீண்டகாலமாக சிறையிலுள்ள கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளித்தல் போன்ற இலங்கை அரசின் திட்டங்களை ஐ.நா. பொதுச்செயலாளரிடம் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும், அதற்காக புலம்பெயர் தமிழர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றேன் என்ற அறிவிப்பு ஒன்றினையும் ஐ.நா. பொதுச்செயலாளர் முன்னிலையில் இலங்கை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தனது இலக்கு எனவும், அதன்படிக்கு, போராட்டக்காரர்கள் மீது முன்னைய காலங்களைப் போன்று பொலிசாரின் உதவியுடன் தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த, தனது ஆட்சியின் கீழ் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனவும், போராட்டக்காரர்களுக்கு என்னுடைய அலுவலகத்துக்கு முன்புறமாகவே தனியிடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா. பொதுச்செயலாளரிடம் கோட்டாபய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியும் ஐ.நா. பொதுச்செயலாளரும் சந்தித்து, இலங்கை தொடர்பான பல பிரச்சனைகளை ஒழிவு மறைவின்றி உரையாடியதோடு மாத்திமல்லாது, பரஸ்பரம் கருத்துக்களைக் பரிமாறிக்கொண்டானது இலங்கையின் வரலாற்றில் பெரும் திருப்புமுனையாகவே பார்க்கப்பட வேண்டும். 2013 ஆம் ஆண்டிற்குப் பின்னர், இலங்கை அரசதரப்பினர் கூட்டத் தொடர்களுக்காக ஐ.நா. சபை செல்லும் ஒவ்வொரு தடவையும், அவை பரபரப்பான நிகழ்வுகளாகவே கட்டியமைக்கப்பட்டு வந்துள்ளன. இதற்குக்காரணம், 2009 ஆண்டு முடிவுக்கு வந்த இலங்கை உள்நாட்டு யுத்தத்தில் இடம்பெற்றதாக் கூறப்படும் சம்பவங்களை முன்னிறுத்தி, போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கை அரசை உட்படுத்த வேண்டுமெனக் கூறி இலங்கை மற்றும் புலம்பெயர் தமிழ் தேசியவாத சக்திகள், மேற்கத்தைய சக்திகளுடன் இணைந்து தீவிரமாக வேலை செய்து வருவதே.

முதன்முறையாக இலங்கை ஜனாதிபதி ஒருவர் புலம்பெயர் தமிழர்களுடன் கலந்துரையாடத் தயாராக இருப்பதாக அறிவித்தது தொடர்பாக இலங்கையிலுள்ள தென்னிலங்கைக் கட்சிகள் இதுவரையில் எந்த கருத்தினையும் பகிரங்கமாக வெளியிட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ் தேசியக்கூட்டமைப்பும் இலண்டனை மையமாகக்கொண்ட உலகத்தமிழ் பேரவையும் (GTF) வேறு சில புலம்பெயர் சக்திகளும் இந்த அழைப்பினை வரவேற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் உள்ளகப்பிரச்சனைகளைத் தீர்க்க, இலங்கையிலுள்ள கட்சிகளுடனல்லவா பேச வேண்டும், அதைவிடுத்து எதற்காக ஜனாதிபதி புலம்பெயர் தமிழர்களை அழைத்துள்ளாரென்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. குறிப்பாக இலங்கையிலுள்ள தமிழ் தேசியவாதத் தரப்பினரைக் கடந்து, புலம்பெயர் தமிழர்களுக்கு பகிரங்கமாக பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தமை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றே கூற வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி புலம்பெயர் அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்தமைக்கு குறைந்தது இரண்டு காரணங்கள் இருக்கலாம். முதலாவது, இலங்கைத் தமிழ் தேசியவாதத் தரப்பினருடன் கடந்த காலங்களில் பேசியதில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால், இவர்களுடன் பேசுவதைக் காட்டிலும் இவர்களுக்கு பணப்பட்டுவாடை செய்யும் புலம்பெயர் அமைப்புகளுடன் நேரடியாகப் பேசுவது நல்லது என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கலாம். அத்துடன், தமிழ் தேசியவாதத் தரப்பினரும் புலிகள் தோற்கடிக்கப்பட்ட யுத்தத்திற்கு தலைமை வகித்த ராஜபக்ஷ தரப்பினருடன் பேசுவதைக் காட்டிலும், ரணில் தலைமையிலான ஐ.தே.கவுடன் பேசுவதையே சௌகரியமானதாகக் கருதி நடந்து வருகிறார்கள். இரண்டாவது, ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு சில புலிசார்பு புலம்பெயர் அமைப்புகளே பின்னணியில் இருக்கிறார்கள் என்பது இலங்கை அரசின் கருதுகோளாக இருக்கலாம்.

இலங்கையின் கால் நூற்றாண்டு காலம் நீடித்த உள்நாட்டு யுத்தத்திற்கும், அதன் பின்னரான நிலைமைகளுக்கும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மாத்திரமே காரணம் என்று தமிழ் தேசியவாதக்கட்சிகள் காலங்காலமாக குற்றஞ்சாட்டி வருகிறார்கள். இது மிகவும் தவறானது. இலங்கையில் சிங்கள – தமிழ் பிரிவினையை ஊட்டி வளர்த்தமைக்கு தமிழ் தேசியவாதிகளும் முழுப்பொறுப்பாளிகளாவார். இந்த பொறுப்பை ஏற்று அவர்கள் உணர்ந்து நடந்தால் மாத்திரமே பிரச்சனைகளைத் தீர்க்க முடியும்.

அத்துடன் உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழ் தேசியவாதிகள், கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய ஆட்சியாளர்களை கடும் போக்காளர்களென வெளியுலகுக்கு சித்தரித்து அரசியல் செய்வதை முற்றாக நிறுத்த வேண்டும். இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளை பேசுவதின் ஊடாக மாத்திரமே தீர்க்க முடியும் என்பதில் முற்றுமுழுதாக நம்பிக்கை வைத்து, பொறுப்புணர்வோடு தமிழ் தேசியவாதிகள் செயற்பட்டால் மாத்திரமே, இலங்கையிலுள்ள சகல இன மக்களுக்குமான சிறந்த எதிர்காலத்திற்கான அடித்தளத்தினை இடலாம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# அதிதீவிர வறுமையை ஒழித்துக் கட்டிய சோசலிச சீனா!



ஒருபுறம் பெரும் கோடீஸ்வரர்கள் விண்வெளிப் பயணம் செய்ய நூற்றுக் கணக்கான கோடிகளைச் செலவு செய்யும் போது, சத்தமே இல்லாமல் இன்னொரு புறம் அதிதீவிர வறுமையை ஒழித்துக் கட்டியிருக்கிறது சீனா. அதுவும் கடுமையான கொரோனா காலத்தில் அடையப்பட்டது என்பது இன்னொரு சிறப்பு. விண்வெளியை யார் முதலில் சுற்றுவது என்று அமெரிக்காவுக்கும், சோவியத்துக்கும் போட்டி ஏற்பட்டது பழைய கதை. முதலில் சோவியத் விண்வெளியை சுற்றி வந்தாலும், அதை முறியடிப்போம் என்று சொல்லி அமெரிக்க தனது ரொக்கெட்டை நிலவைத் தொட வைத்து, ஆம்ஸ்ட்ராங்கையும், ஆல்ட்ரின்னையும் அங்கு இறக்கியது.

இப்போது கதை வேறு. பெரும் கோடீஸ்வரர்கள் சில நிமிடங்கள் விண்வெளியைத் தொடும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. அதில் முதலில் விண்வெளியைத் தொட்ட ஒரு விமான ரொக்கெட்டில் பயணித்த கோடீஸ்வரர் 85000 அடி உயரத்தைத் தொட்டுத் திரும்பினார். அந்த விமானத்தை அனுப்பிய கொம்பனியின் போட்டி கொம்பனி தாம் அனுப்பப் போகும் விமான ரொக்கெட் ஒரு இலட்சம் அடி உயரத்தைத் தொடும், அதாவது உலகின் காற்றுப் பகுதியின் இறுதியை அடையும் என்று சவால் விடுத்துள்ளது.

புதிய தாராளமயக் கொள்கைகளைப் பயன்படுத்தி உலகெங்கிலும் உள்ள பெரும் கோடீஸ்வரர்கள் தமது செல்வத்தைப் பல மடங்கு இந்தக் கொரோனா காலத்தில் பெருக்கிக் கொண்டுள்ளனர். இன்னொரு புறம் அறுதிப் பெரும்பான்மையினரான சாதாரண மக்கள் தமது வேலையையும், வாழ்க்கையையும் இழந்து அதிதீவிர வறுமையில் சிக்கிக் கொண்டுள்ளனர். இந்த நிலையில்தான் இந்த இரண்டு முரணான நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளன.

சர்வதேச நிதியம் வெளியிட்ட உலகப் பொருளாதார அறிக்கையில் பல விஷயங்களை அது சுட்டிக் காட்டியுள்ளது. நமது உலகைப் பல பிரச்சனைகள் அழுத்திக் கொண்டிருக்கின்றன. உலக விநியோகச் சங்கிலியில் இடையூறுகள், அதிகரித்து வரும் சரக்குப் போக்குவரத்துச் செலவு, கச்சாப் பொருட்களின் பற்றாக்குறை, அதிகரிக்கும் பொருட்களின் விலை, பொருளாதாரங்கள் மீது அதிகரிக்கும் பணவீக்க அழுத்தங்கள் போன்றவற்றை அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. உலக அளவில் அதிகமான அரசுக் கடனால் உந்தப்பட்டு, உலக வளர்ச்சி வீதங்கள் 2021இல் 6 சதவீதத்தையும், 2022இல் 4.9 சதவீதத்தையும் தொடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, இந்தக் கடன், 2020 இல் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதுவரை இல்லாத அளவுக்கு 100% ஐத் தொட்டு விட்டது என்றும், 2021, 2022இல் அதே அளவில் நீடிக்கும் என்றும் கூறப்படுகிறது. வளரும் நாடுகளின் வெளிநாட்டுக் கடன் அதிகமாகவே நீடிக்கும். அதில் பெரிதாக நிவாரணம் ஒன்றும் கிடைக்காது.

*விஜய் பிரசாத்*

ஒவ்வொரு ஆண்டும் உலக பன்னாட்டு நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணர் கீதா கோபிநாத் (Gita Gopinath) இந்த அறிக்கையின் முக்கியமான அம்சங்களைத் தனது 'புளொக்'(blog)கில் வெளியிட்டு வருகிறார். இந்த ஆண்டு, அவரது 'புளொக்' தெளிவாகத் தனது தலைப்பில் இவ்வாறு குறிப்பிடுகிறது: 'மேலும் விரிவடையும் பிளவு: உலக மீட்சியில் அதிகரிக்கும் விரிசல்'. இந்த விரிசல் வடக்கு-தெற்கு வழியில் செல்கிறது. பெருந்தொற்றால் உந்தப்பட்ட உலகளாவிய மந்த நிலையிலிருந்து விடுபட ஏழை நாடுகளால் எளிய வழியைக் காண முடியவில்லை. இந்த விரிசலை உண்டாக்கும் பல காரணங்கள் உள்ளன. அதிகமாகத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான தண்டனை, மக்கள் தொகையின் பரவலான ஏழ்மை நிலை, நீண்ட காலப் பிரச்சனையான கடன். ஆனால் கீதா ஒரு விஷயத்தில் தன் கவனத்தைச் செலுத்துகிறார்: தடுப்பூசி தீண்டாமை (vaccine apartheid) முன்னேறிய பொருளாதாரங்களில் 40% பேர் தடுப்பூசி பெற்று விட்டனர். வளரும் நாடுகளில் 11% பேரும், குறைந்த வருவாய் கொண்ட வளரும் நாடுகளில் மிகவும் குறைவாகவே தடுப்பூசி பெற்றுள்ளனர் என்று அவர் குறிப்பிடுகிறார். தடுப்பூசி கிடைக்காததுதான் பொருளாதார மீட்சியில் ஏற்படும் இந்த விரிசலுக்குக் காரணம் என்று அவர் வாதிடுகிறார்.

இவ்வாறு விரிவடையும் பிளவுகளால் உடனடியான சமூக விளைவுகள் ஏற்படுகின்றன. ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 2021ஆம் ஆண்டு அறிக்கையைப் பார்ப்போம். உலக அளவிலான உணவுப் பாதுகாப்பு மற்றும் சத்துணவு பற்றிக் கூறும்போது, '2020ஆம் ஆண்டில் உலகின் சுமார் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு (2.37 பில்லியன் 100 கோடி) போதுமான உணவு கிடைக்கவில்லை – ஒரே வருடத்தில் இந்த அளவில் 320 மில்லியன் (ஒரு மில்லியன்: 10 இலட்சம்) மக்கள் அதிகரித்துள்ளனர். பட்டினி என்பது சகிக்க முடியாத ஒன்று.

இப்போது தென்னாப்பிரிக்காவில் உணவுக்கான கலவரங்கள் அதிரடியாக அதிகரித்து வருகின்றன. அவர்கள் இங்கு எங்களைப் பட்டினியால் சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று இந்தக் கலவரத்தில் பங்கேற்ற ஒரு 'டேர்பன்' வாசி (Durban resident) குறிப்பிட்டார். இந்த எதிர்ப்புக்களூம், உலக பன்னாட்டு நிதியம் மற்றும் ஐ.நாவும் வெளியிட்ட விவரங்கள் மீண்டும் பட்டினியை உலக நிகழ்ச்சிநிரலில் மகொண்டு வந்துள்ளன.

ஜூலை இறுதியில், ஐ.நாவின் பொருளாதார, சமூக கவுன்சில் நிலைத்து நீடிக்கும் வளர்ச்சி பற்றிய ஒரு உயர்மட்ட அரசியல் கூட்டத்தை நடத்தியது. இந்த அமைப்பின் அமைச்சரவைப் பிரகடனமானது, கோவிட் 19 பெருந்தொற்றினால் விளைந்த நெருக்கடியை அங்கீகரித்தது. நாடுகளுக்குள்ளும், நாடுகளுக்கு இடையிலும் அதிகரித்த உலகின் பலவீனங்களையும், அமைப்பு ரீதியான பலவீனங்கள், சவால்கள், ஆபத்துக்கள் அழுத்தம் தந்து நிலைத்து நீடிக்கும் வளர்ச்சி இலக்குகளை அடைவதைத் தடுத்து நிறுத்தவோ அல்லது முன்னேற்றத்தை பாதிக்கவோ செய்கிறது என்று பிரகடனம் கூறுகிறது. 2015இல் நிலைத்து நீடிக்கும் பதினேழு வளர்ச்சி இலக்குகள் ஐ.நா உறுப்பு நாடுகளால் நிர்ணயிக்கப்பட்டன. அவற்றில் வறுமை ஒழிப்பு, பட்டினியை ஒழித்துக் கட்டுவது, நல்லாரோக்கியம், பாலின சமத்துவம் ஆகியவை அடங்கும். இந்த இலக்குகளை 2030இல் அடைய முடியாது என்பது பெருந்தொற்றுக்கு முன்னாலேயே வெளிப்பட்டு விட்டது. பட்டினியை ஒழித்துக் கட்டுவது என்ற மிகவும் அடிப்படையான இலக்கைக் கூட அடைய முடியாது.

இந்த இருண்ட காலகட்டத்தில், 2021 பெப்ரவரியில் சீனாவின் அதிபர் ஷி ஜின்பிங் (Xi Jinping), இந்த உலகளாவிய மந்தநிலைக்கும் முரணாக, சீனா அதிதீவீர வறுமையை ஒழித்துக் கட்டி விட்டதாக அறிவித்தார். இந்த அறிவிப்பின் பொருள் என்ன? அதாவது 85 கோடி மக்கள் கடும் வறுமையிலிருந்து மீண்டு விட்டனர் (1949இல் சீனப் புரட்சியில் தொடங்கிய இந்த நீண்ட எழுபது ஆண்டு கால நிகழ்வு முடிவுக்கு வந்தது), அவர்களது சராசரி வருவாய் பத்தாயிரம் அமெரிக்க டொலராக அதிகரித்தது (கடந்த இருபது ஆண்டுகளில் இது பத்து மடங்கு அதிகரித்துள்ளது), சராசரியாக உயிர்வாழும் வயது 77 ஆக அதிகரித்துள்ளது (இது 1949இல் 35 ஆக இருந்தது) என்பதே இதன் பொருள். இலக்கை பத்தாண்டுகளுக்கு முன்பே எட்டியதன் மூலம் உலக வறுமை ஒழிப்பில் 70% இனை சீனா செய்து காட்டியுள்ளது. இந்த வெற்றியை 'உலக நாடுகளின் ஒட்டுமொத்த சமூகத்திற்கு நம்பிக்கை மற்றும் ஊக்கத்தை அளிக்கும்' என்று ஐ.நாவின் பொதுச்செயலாளர் அண்டோனியோ குட்ரெஸ் (António Guterres) மார்ச் 2021இல் கொண்டாடினார்.

இதைத் தொடர்ந்து தோழர் விஜய் பிரசாத் தலைமையில் செயல்படும் ட்ரைகாண்டினண்டல் (Tricontinental): சமூக ஆய்வுக்கான நிறுவனம் தனது தொடர் ஆய்வை ஜூலையில் மேற்கொண்டது. சோசலிசக் கட்டமைப்புக்கான ஆய்வு என்ற இந்த ஆய்வில் கியூபாவிலிருந்து கேரளம் வரையிலும், பொலிவியாவிலிருந்து சீனா வரையிலும் சோசலிச நடைமுறைகளின் கட்டமைப்பை ஆய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நீண்ட கால ஆய்வுத் திட்டத்தில் சீனாவின் பல்வேறு பகுதிகளில் மக்களுக்குச் சேவை என்ற பெயரில் நடைபெறும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை கள அளவில் ஆய்வு செய்வது, இத்திட்டத்தில் பங்கேற்ற நிபுணர்களிடம் பேட்டி எடுப்பது போன்றவை நடைபெறும். உதாரணமாக, ரென்மின் பல்கலைக்கழகத்தின் (Renmin University) தேசிய வறுமை ஒழிப்பு ஆய்வு நிறுவனத்தின் தலைவரான வாங் சாங்குயி (Wang Sangui) சீன அணுகுமுறையில் பன்முக வறுமைக் கோட்பாடு எவ்வாறு மையமான ஒன்று என்பதை எங்களிடம் கூறினார்.

இந்தக் கோட்பாடு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டமான மூன்று உறுதிகள் (பாதுகாப்பான வீட்டு வசதி, சுகாதார வசதி, கல்வி) மற்றும் இரண்டு உறுதிகள் (உணவு அளித்தல், ஆடை அளித்தல்) ஆகியவற்றிலிருந்து வந்தது. ஆனால் இங்கும் கூட, இந்தக் கொள்கையின் சாரம் ஆழமாக உள்ளன. வாங் இதனை தண்ணீரைக் கொண்டு விளக்கினார்:

குடி தண்ணீர் பாதுகாப்பாக உள்ளது என்பதை நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்? முதலில், தண்ணீர் விநியோகத்தில் எந்தப் பற்றாக்குறையும் இருக்கக் கூடாது என்பது அடிப்படைத் தேவை. இரண்டாவது, தண்ணீர் எடுக்கும் நீராதாரம் மிகவும் தொலைவில் இருக்கக் கூடாது. தண்ணீர் எடுத்து வர 20 நிமிடங்களுக்கு மேல் ஆகக் கூடாது. கடைசியாக, தண்ணீரின் தரம் எந்த ஊறு விளைவிக்கும் பொருளும் இல்லாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும். தண்ணீரின் தரம் பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை உறுதி செய்ய நமக்கு சோதனை முடிவுகள் தேவை. அப்போதுதான் நாம் அதற்கான தரம் அடையப்பட்டு விட்டது என்று கூற முடியும்.

ஒரு கொள்கை வடிவமைக்கப்பட்டதும், அதனை அமுலாக்குவதும் தொடங்குகிறது. கிராமப்புறத்தின் வறுமை நிலையின் ஆழத்தைப் புரிந்து கொள்ள வீடுகளை மதிப்பீடு செய்யும் பணிக்கு உள்ளூர் அதிகாரிகளுக்கு உதவுவதற்காக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எட்டு இலட்சம் தொண்டர்களை அனுப்பியது. பிறகு கட்சியின் 9.51 கோடி உறுப்பினர்களில் 30 லட்சம் உறுப்பினர்களை 2,55000 குழுக்களில் உறுப்பினர்களாக ஒதுக்கியது. அவர்கள் வறுமை நிறைந்த கிராமங்களில் பல ஆண்டுகள் வாழ்ந்து, அது உருவாக்கிய வறுமையையும், சமூக நிலைகளையும் ஒழிக்க உழைத்தனர். ஒரு கிராமத்துக்கு ஒரு குழுவும், ஒரு குடும்பத்துக்கு ஒரு தொண்டரும் ஒதுக்கப்பட்டனர்.

வறுமை குறித்த ஆய்வுகளும், தொண்டர்களின் அனுபவமும் சேர்ந்து வறுமையை ஒழிக்க ஐந்து மையமான வழிமுறைகளை உருவாக்கின: தொழிலை வளர்ப்பது, மக்களை மீள்குடியமர்த்துவது, சுற்றுச்சூழல் நிவாரணத்துக்கு ஊக்கமளித்தல், இலவச, தரமான, கட்டாயக் கல்வியை உறுதிப்படுத்துவது, சமூக உதவி அளிப்பது. இந்த ஐந்து மிகவும் வலுவான உந்துகோல்களில் தொழில் வளர்ச்சியானது அதிக முதலீடுகளுடனான விவசாய உற்பத்தி, (பயிர் செயலாக்கம், கால்நடை வளர்ப்பு உட்பட) விளைநிலங்களை மீண்டும் அமைத்தல், சுற்றுச்சூழல் நிவாரணத் திட்டங்களின் ஒரு பகுதியாகக் காடு வளர்த்தல், ஆதாரங்களை அதிகமாக உறிஞ்சியதால் கெட்டுப் போன

பகுதிகளை மீண்டும் உயிர்ப்பித்தல் ஆகியவை அடங்கும். கூடுதலாக சிறுபான்மை மக்களுக்கும், பெண்களுக்கும் கல்வி அளிப்பதன் மீது அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக, 2020 வாக்கில், உலகப் பொருளாதார அமைப்பின் கூற்றுப்படி சீனா உலகில் இறுதிக் கல்வியைப் பெண்கள் பெறுவதில் முதலிடத்தை அடைந்தது.

தம்மை தீவீர வறுமையிலிருந்து விடுவித்துக் கொண்டவர்களில் 10% இற்கும் குறைவானவர்கள் இடப்பெயர்ச்சியால்தான் அதை அடைந்தனர். இது இத்திட்டத்தில் மிகவும் நாடகபாணியிலான நடவடிக்கை. இவ்வாறு இடப்பெயர்ச்சி செய்த ஒருவரான மவுஸ் (Mou'se) அதற்கு முன் அவர் ஒரு மலையின் முனையிலிருந்த அடுலீர் (Atule'er) என்ற கிராமம் பற்றி எனக்குச் சொன்னார். 'ஒரு பைக்கெற் உப்பு வாங்குவதற்கு மலையைத் தாண்ட எனக்கு அரை நாளானது' என்றார். அந்த மலைமுகடின் முனையில் ஆபத்தான முறையில் ஆடிக் கொண்டிருந்த ஒரு கயிற்றேணியில் அவர் இறங்கிக் கீழே செல்ல வேண்டும். அவரும், அவருடன் சேர்ந்து எண்பத்து மூன்று குடும்பங்களும் இடப்பெயர்ச்சி செய்து கொண்டதானது அவர்களை இப்படிப்பட்ட மோசமான வாழ்க்கையிலிருந்து விடுவித்து நல்ல வசதிகளைக் கிடைக்கச் செய்துள்ளது.

தீவிர வறுமையை ஒழித்துக் கட்டியதென்பது மிகவும் முக்கியமானது என்றாலும் அது அனைத்துப் பிரச்சனைகளையும் அதுவே தீர்த்து விடாது. சீனாவில் சமூக அசமத்துவம் மிகவும் தீவீரமான பிரச்சனையாக உள்ளது. இது சீனாவின் பிரச்சனை மட்டுமல்ல, நமது காலத்தில் மனித இனத்தை அழுத்திக் கொண்டிருக்கும் பிரச்சனைகளில் ஒன்று. மிகச் சில விவசாயிகளே தேவைப்படும் மூலதனம் மிகுந்த விவசாயத்துக்கு நாம் நுழையும்போது, கிராமப்புறமும் அல்லாத, நகர்ப்புறமும் அல்லாத இடங்களில் நாம் எப்படிப்பட்ட குடியிருப்புகளை உருவாக்கப் போகிறோம்? விவசாயத்தில் இனியும் தேவைப்படாத மக்களுக்கு நாம் எந்த வகையான வேலைவாய்ப்புக்களை உருவாக்கப் போகிறோம்? சமூக, சமூகம் சார்ந்த வாழ்க்கைக்கு அதிக நேரம் கொடுக்கும்படியாக நாம் குறைந்த வார வேலைநாட்களைக் கொடுப்பதன் மூலம்



தொடங்க முடியுமா?

வறுமையை ஒழிப்பது என்பது சீனாவின் திட்டமல்ல. அது மனித இனத்தின் இலக்கு. அதனால்தான் இந்த இலக்குக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட இயக்கங்களும், அரசுகளும் சீன மக்களின் இந்த வெற்றியைக் கவனமாகப் பார்க்கின்றனர். எனினும் நடப்பில் இருக்கும் பல திட்டங்களில் (தென்னாப்பிரிக்காவின் பல ஆய்வு நிறுவனங்கள் கூறுவது போல) வருவாயை மடைமாற்றுவது என்ற வேறுபட்ட அணுகுமுறை மூலம் வறுமையை ஒழித்துக் கட்ட முயலப்படுகிறது. ஆனால் பணத்தை நேரடியாக அளிக்கும் திட்டங்கள் போதுமானவை அல்ல. பலபரிமாண வறுமைக்கு இதை விட அதிகத் தேவை உள்ளது. உதாரணமாக பிரேசிலின் முன்னாள் அதிபர் லூலா டி சில்வா அமுல்படுத்திய பிரேசிலின் போல்சா ஃபேமிலியா திட்டம் அந்த நாட்டின் பட்டினியில் பெரும் உடைப்பை ஏற்படுத்தியது, ஆனால் அது பட்டினியை ஒழிப்பதற்கான திட்டமேயல்ல.

அதே சமயம், இந்திய மாநிலமான கேரளாவில் 1973-74இல் இருந்த 59.79% தீவீர வறுமையானது, இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சியில் 2011-12இல் 7.05% ஆக வீழ்ச்சியடைந்தது. விவசாய சீர்திருத்தம், பொதுக்கல்வி, சுகாதார வசதிகளை உருவாக்கியது, உணவுப் பொதுவிநியோக முறையை உருவாக்கியது, சமூகப் பாதுகாப்பு, நலனை அளித்தது, (குடும்பஸ்ரீ கூட்டுறவுத் திட்டங்களைப் போன்ற) பொதுச்செயல்பாடுகளை அதிகரித்தது ஆகியவை இந்தப் பெரும் சரிவுக்கு இட்டுச் சென்றன. சமூகக் கட்டுமானம் பற்றிய எங்களது தொடர் ஆய்வின் அடுத்த நடவடிக்கை கேரளாவின் கூட்டுறவு இயக்கத்தில் கவனம் செலுத்தும், வறுமை, பட்டினி, ஆணாதிக்கத்தை ஒழிப்பதில் அதன் பங்கின் மீது கவனம் செலுத்தும்.

மார்ச் மாதத்தில், ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டம் தனது உணவு வீணாகுதல் குறித்த தகவல் அறிக்கையை வெளியிட்டது. உலகம் முழுதும் சுமார் 931 மில்லியன் தொன் (ஒரு தொன் ஆயிரம் கிலோகிராம்) உணவு குப்பைத் தொட்டிகளில் கொட்டப்படுவதை அந்த அறிக்கை காட்டுகிறது. அதாவது 40 தொன் கொள்ளளவு கொண்ட ட்ரக்குகளில் அவற்றை ஏற்றினால், 23 மில்லியன் ட்ரக்குகளில் முழுவதுமாக அவற்றினை நிரப்பலாம். இந்த 23 மில்லியன் ட்ரக்குகளை வரிசையாக இடைவெளியின்றி நிற்க வைத்தால், இந்த உலகின் சுற்றளவை அது ஏழு முறை சுற்றி வரும்.

கோடீஸ்வரர்களான ஜெஃப் பெசோசும், ரிச்சர்ட் பிரான்சனும் (Jeff Bezos and Richard Branson) விண்வெளிக்குச் செல்வதற்கு முடிவெடுத்தார்கள். அவர்களில் பெசோஸ் விண்வெளியில் நான்கே நிமிடம் செலவிடுவதற்கான பயணத்துக்கு 5.5 பில்லியன் டொலர்களை செலவிட்டார். அந்தப் பணத்தைக் கொண்டு 37.5 மில்லியன் மக்களுக்கு உணவளித்திருக்க முடியும் அல்லது இரண்டு கோடி மக்களுக்கு கோவிட் தடுப்பூசியைப் போட்டிருக்க முடியும்.

பெசோசுக்கும், பிரான்சனுக்கும் இருக்கும் இலட்சியங்கள் வாழ்க்கையல்ல. மாறாக, வாழ்க்கை என்பது தேவைகளின் கொடுமையை ஒழிப்பதேயாகும். (The ambitions of Bezos and Branson are not life. Life is the abolition of the harshness of necessity)

**தமிழில்: கி.ரமேஷ்**

'படிப்பு என்பது நடைமுறைக்கு அப்பாற்பட்டதல்ல, நடைமுறை என்பது படிப்புக்கு அப்பாற்பட்டதும் அல்ல. இரண்டும் இணைந்தே நடைபெற வேண்டும். படிப்பைத் தனியாகவும், செயற்பாட்டைத் தனியாகவும் பிரிக்க முடியாது.' **– எங்கெல்ஸ்**

# கோவிட் நோய்க்கு எதிரான பாரம்பரிய வைத்தியம்

**இ**லங்கை ஆயுர்வேத திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் தம்மிக்க அபேகுணவர்த்தன (Dr. Dhammika Abeygunawardena) கொழும்பிலிருந்து வெளிவரும் 'டெயிலி மிரர்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் சில முக்கியமான பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன:

**கேள்வி:** எவ்வளவு கொவிட் நோயாளிகள் ஆயர்வேத வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்?

**பதில்:** இலேசான நோய் அறிகுறியுள்ளவர்களை நாம் எமது வைத்தியசாலைகளில் அனுமதித்து வருகின்றோம். அவர்களுக்கு சுவாசிக்கும் பிரச்சினை இருந்து, பிராணவாயு தேவைப்பட்டால் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு செல்லுமாறு அறிவுறுத்துகிறோம். கொவிட் அறிகுறிகள் இருந்து அனுமதிக்கப்பட்ட 4969 நோயாளிகளில் 3935 பேர் ஆகஸ்ட் 20 வரை விடுவிக்கப்பட்டுள்ளனர். கடுமையான நோய் அறிகுறிகள் இருந்த 230 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதுவரை 2 பேர் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** நோயாளிகளும் மற்றும் பொதுமக்களும் எவ்வாறு இந்தத் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது?

**பதில்:** இந்தத் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொருவரும் தடுப்பூசி செலுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் சமீபத்தில் ஜனாதிபதி சுதேச மருந்துகள் மக்களின் வீடுகளுக்கு வழங்கப்படும் என அறிவித்துள்ளார். எம்மிடம் தடுப்பு மாத்திரைகள் உள்ளன. நோய் எதிர்ப்புச் சக்தி பலவீனமடையும்போது ஒருவருக்கு நோய்த் தாக்கம் ஏற்படுகின்றது. ஒருவர் தனது நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்த இரண்டு விடயங்களைச் செய்ய வேண்டும். அதாவது, சமபல உணவை எடுப்பதுடன், ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் பின்பற்ற வேண்டும். இந்த இரண்டு விடயங்களிலும் தோல்வி காணும் போது மாத்திரைகள் எடுப்பது தவிர்க்க முடியாதது. மக்கள்



Dr. Dhammika Abeygunawardena

இந்தப் பெருந்தொற்றிலிருந்து எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வது என்பதை விளக்குவதற்காக நாங்கள் ஒரு கடுகதி தொலைபேசி வழிமுறையையும், முகநூல் பக்கம் ஒன்றையும் அறிமுகம் செய்துள்ளோம்.

இதில் நாங்கள் கொவிட் சம்பந்தமாக முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளியைப் பேணுவது போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்தியுள்ளோம். நோய் எதிர்ப்புச் சக்தியைப் பலப்படுத்துவதற்காக சரியான முறையில் நித்திரை கொள்ளும் முறைகள் மற்றும் கொத்தமல்லி பானத்தை அருந்துதல் போன்ற விடயங்களை மக்களுக்கு கற்பிக்கின்றோம். வைத்தியர்களின் ஆலோசனைக் குழுவொன்றால் தயாரிக்கப்படும் தடுப்பு மாத்திரைகளையும் எமது நோயாளிகளுக்கு வழங்குகின்றோம்.

**கேள்வி:** கொவிட்டுக்கு எதிரான அங்கீகரிக்கப்பட்ட மருந்துகள் ஏதாவது உங்களிடம் உள்ளதா?

**பதில்:** நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் 14 விதமான மருந்துகளை ஆயுர்வேத திணைக்களம் உருவாக்கியுள்ளது. இவற்றை கட்டணம் எதுவுமின்றி மருந்தகங்களிலும், முன்னணி சுப்பர் மார்கட்டுகளிலும் பெற முடியும். ஆயுர்வேத முறை நோயாளிகளை பராமரிக்கிறது. இந்த மாத்திரைகளும், தூள்களும், மருத்துவ முறைகளும் நீண்டகால பொருட்களால் தயாரிக்கப்படுபவை. சிலது 200 வருடங்கள் பழமையானவை. எனவே 200 வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முறையை நாம் மீள் அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், உதாரணமாக, ஒரு தூளை பாணியாக மாற்றும்போது, வித்தியாசம் இருப்பதால் மீள் பதிவு செய்ய வேண்டியுள்ளது. முறை மாற்றம் செய்யும்போது நாம் இந்த மாத்திரைகளை ஆய்வுக்கு சிபார்சு செய்வோம். மேலதிக தகவல்களை www.ayurveda.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

**கேள்வி:** கொவிட் சிகிச்சைக்கு சீனா போன்ற நாடுகளில் கூட சுதேச மருத்துவமும் மேற்கத்தைய மருத்துவமும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இலங்கையில் இரண்டு முறைகளும் தொடர்பற்று காணப்படுகின்றது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** இது மக்களின் நோக்கு நிலையைப் பொறுத்தது. சில வேளைகளில் அவர்கள் தமக்குரியதைத் தெரிவு செய்கிறார்கள். ஆனால் நாம் இதை திறந்த மனதுடன் பார்க்க வேண்டும். மேற்கத்தைய வைத்திய முறையை செய்பவர்கள் கூட கடுமையான நோய் அறிகுறி உள்ளவர்களுக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவைச் சிபார்சு செய்வதைக் குறிப்பிட விரும்புகிறேன். கடுமையான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நுரையீரல் நோய் உள்ளவர்களே கூடுதலாக அங்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களிடம் கடுமையான நோய் தாக்கங்கள் வளர்ச்சி அடைவதற்கான ஒரு போக்கு இருக்கும். இதற்குக் காரணம் எமது ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையும் உணவு முறையும் ஆகும். சிறு வயது முதலே ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வந்தால் இவற்றைத் தவிர்க்கலாம். இப்பொழுதெல்லாம் ஒரு பரசெற்றமோல் மாத்திரையை எம்முடன் வைத்திருப்பது ஒரு நாகரீகமாகப் போய்விட்டது. ஆனால் பின்னோக்கிப் பார்த்தால் எமது மூதாதையர்கள்

உள்ளூர் மூலிகைகளிலேயே தங்கியிருந்ததைக் காணலாம்.

**கேள்வி:** சிலர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். அப்படியானவர்களுக்கு அதற்குப் பதிலாக சுதேச வைத்தியத்தில் ஏதாவது மாற்று உண்டா?

**பதில்:** கொவிட்டைத் தடுப்பதற்கான வழிமுறையாக கொள்கை வகுப்பாளர்களும், உலக சுகாதார அமைப்பு போன்ற நிறுவனங்களும் தடுப்பூசி ஏற்றுவதையே முன்னிலைப்படுத்துகின்றனர். சிலர் தடுப்பூசி போடுவதை விரும்புகின்றனர். சிலர் விரும்புகிறார்கள் இல்லை. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், கொவிட் தடுப்புக்கான வழிமுறைகளான தடுப்பூசி ஏற்றுதல், கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல், முகக் கவசம் அணிதல் என்பனவற்றுடன், அங்கீகரிக்கப்பட்ட சுதேச தடுப்பு மாத்திரைகளையும் எடுக்கலாம். தொற்றைக் குறைப்பதற்கே நாம் முயல்கின்றோம். ஒன்றை அவசியம் மனதில் கொள்ள வேண்டும். இந்த நோயால் ஒருவர் மரணித்தால் அவரது குடும்ப உறுப்பினர்கள் கூட அவருக்குத் தமது இறுதிச் சடங்குகளைச் செய்ய முடியாமல் உடல் உடனடியாக எரிக்கப்படும் என்பதை. எனவே, பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்வதே புத்திசாலித்தனமாகும். அரசாங்கங்களோ, நிர்வாகங்களோ தனியாக இந்த தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த முடியாது.

**கேள்வி:** பல்வேறு வகையான உள்ளூர் மூலிகைகளும், மருத்துவ தாவரங்களும் சமூக வலைத்தளங்களில் பிரசுராப்படுத்தப்படுகின்றன. 'வாட்ஸ் அப்' போன்றவற்றில் கொவிட்டுக்கு எதிரான சிகிச்சைகளுக்கு இவை பயன்படுத்தக் கூடியவை எனவும் சிபார்சு செய்யப்படுகின்றது. இந்தச் செய்திகள் நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து வருகின்றனவா?

**பதில்:** இல்லை. இந்தச் செய்திகளால் தவறாக வழிநடத்தப்பட வேண்டாம் என நான் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு செய்தி ஆயுர்வேத திணைக்களத்தினதோ அல்லது மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினதோ பட்டியலில் இல்லையென்றால் அந்த அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டாம். உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள்இருக்குமாக இருந்தால் தராதரம்மிக்க ஒரு வைத்தியரை அணுகி ஆலோசனை கேட்கவும். நாம் பிரதேசசபைப் பிரிவுகளில் *1000* சமூக மருத்துவ உத்தியோகத்தர்களை நியமித்திருப்பதால், அவர்கள் அதி விரைவு அழைப்புகளுக்கு பதிலளிப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக மருத்துவ ஆலோசனை வழங்குவார்கள்.

**கேள்வி:** சிபார்சு செய்யக்கூடிய வீட்டில் தயாரிக்கும் மூலிகை விடயங்கள் உள்ளனவா?

**பதில்:** ஆயுர்வேத திணைக்களம் நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கக்கூடிய பல்வேறு வகையான மாதிரிகளை உருவாக்கியுள்ளது. அவையாவன:

கொல கண்ட – பச்சை மதுறுத்தல (பேசில்), பொல் பொல, கரபிஞ்சா (கறிவேப்பிலை), எல பட்டு, பொவிரியா.

தம்பன் கொடி (இலங்கை ரசம்) – கொத்தமல்லி, சீரகம், பூண்டு, புளி, கொரக்கா, மிளகு, கறிவேப்பிலை, இஞ்சி, முருங்கைப் பட்டை, கறுவா என்பனவற்றைக் கொண்டு தயாரிக்கப்படுவது. இந்த ரசம் அஜீரணத்தைக் குணமாக்குவதுடன், நீரிழிவு மற்றும் அபரிமித கொழுப்பு உள்ளவர்களுக்கு உதவி நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் என சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

டியபதா (காலை உணவாகப் பயன்படுத்தப்படும் குளிரான சூப்) – கொஞ்ச அரிசி சோற்றை இரவு முழுக்க தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். அதனுடன் நறுக்கிய சிவப்பு வெங்காயம், பூண்டு, இஞ்சி, பச்சை மிளகாய், தேங்காய் பால், தேசிக்காய் சாறு, உப்பு என்பனவற்றைச் சேர்த்து அருந்த வேண்டும். இது உடலுக்கு குளிர்மையாக இருப்பதுடன், வாயுத் தொல்லைக்கும் பரிகாரமாகும்.

## *ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் லிண்டா ஸ்கொட்டின் (Linda Scott) பேட்டி*

**கேள்வி:** பொருளாதார வல்லுநர்களில் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருக்க காரணம் என்ன?

**பதில்:** காரணம், ஆண்களின் மேலாதிக்கம்தான். பெண்கள் இத்துறையில் வளர்ந்து வந்தாலும் கூட அவர்களை கிண்டல் செய்து விரைவில் வெளியேற்றிவிடுகிறார்கள்.

**கேள்வி:** அலுவலகம், வீடு இரண்டையும் சமாளிப்பது என்று கூறப்படுவதை எப்படி பார்க்கிறீர்கள்?

**பதில்:** நீங்கள் கூறும் வார்த்தை முழுக்க பெண்களை நோக்கியே கேட்கப்படுகிறது. இதில் நியாயமில்லை. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவமாக வேலை வழங்கப்படாத நிலையில் இப்படி கேள்வி கேட்கப்படுவது தவறு. பெண்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாதது, சம்பளம் உயர்த்தப்படாதபோது நீங்கள் கூறிய வார்த்தை ஒரு மன்னிப்பாக கூறப்படுகிறது. குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் பெண்களை நோக்கியே இது போன்ற வார்த்தைகள் வீசப்படுகின்றன.

**கேள்வி:** இந்தியாவில் பெண்களுடைய நிலைமை பற்றி தங்களுடைய கருத்து?

**பதில்:** பிற நாடுகளை விட இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு குறைவு. பெண்கள் வாழ்வதற்கு கடினமான நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பெண்கள் கடத்தப்படுவது, பாலியல் வல்லுறவு, தாக்குதல் ஆகியவை காரணமாக பெண்களின் பங்களிப்பு இந்தியாவின் பொருளாரத்தில் குறைவாக உள்ளது. எனவே, இந்தியா நினைத்த உயரத்தை இன்னும் எட்ட முடியவில்லை.

**கேள்வி:** வீட்டிலேயே வேலைக்கு செல்லாமல் இருக்கும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** அவர்களுக்கு பொருளாதார ரீதியாக பாதுகாப்பு இல்லை. அப்படி வீட்டிலேயே இருந்து குழந்தை பெற்றுக்கொண்டு வேலைகளை ஏற்று செய்யவேண்டும் எனில், அவர்களுக்கு சமூகரீதியான பாதுகாப்பு அவசியம். அது கிடைக்காதபோது, அவர்களுக்கு வீட்டுப் பொறுப்புகளை ஏற்று செய்ததற்கான அங்கீகாரமும் பயனும் கிடைக்காது. பெண்கள் வீட்டு வேலைகளை செய்தால் போதும். குழந்தைளை மட்டும் பெற்று வளர்த்தால் போதும் என நினைப்பது மூடநம்பிக்கை.

**கேள்வி:** பெண்களின் உழைப்பு எப்போதும் குறைந்த மதிப்பு கொண்டதாகவே பார்க்கப்படுவது ஏன்?

**பதில்:** அதற்கு காரணம், அந்த வேலைகளை செய்யும் பெண்களும் கூட அப்படியேதான் நினைக்கிறார்கள். பெண்கள் எப்போதும் அடிமையாகவே வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு பணம், பொருளாதாரம், சுதந்திரம் என எதுவுமே கிடைக்கவில்லை. நீங்கள் அடிமையாக பிடித்து வைதிருப்பவர்களுக்கு என்ன கொடுப்பீர்கள். அதேதான் வரலாறு முழுவதும் பெண்களுக்கு கிடைத்தது. வன்முறை, கொடுமைகள், சுரண்டல் ஆகியவைதான் நடந்தன.

# ஆப்கானிஸ்தான்: அமெரிக்க ஆக்கிரமிப்பும் அதன் பிறகும்

20 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் தாக்கப்பட்டதும், சில மணி நேரங்களில் அது தூளாகிப் போனதும் உலகம் முழுவதும் தொலைக்காட்சிகளில் நேரலையானது. 110 மாடி கட்டடங்கள் நொறுங்கின, பல அடுக்கு மாடிகளில் இருந்து உயிர் அச்சத்தில் குதித்தவர்களை பார்க்கும்போது குலை நடுங்கியது. 2977 பேர் இந்த தாக்குதலில் பலியானார்கள்.

20 ஆண்டுகள் கடந்த பிறகு, ஆப்கானிஸ்தான் விமான நிலையத்திலிருந்து சில காட்சிகள் உலக ஊடகங்களை ஆக்கிரமித்தன. விமான ஓடு தளத்தில் உயிருக்கு அஞ்சி நடுங்கும் மக்களில் ஒரு பகுதியினர் கூடியிருந்தார்கள். ரயில்களிலும், பேருந்துகளிலும் மேலே அமர்ந்து பயணிப்பதைப் போல, விமானத்தின் மீது அமர்ந்துகொண்டோ, தொங்கிக்கொண்டோ பயணிக்க முடியும் என்று அவர்கள் நினைத்திருந்ததுதான் விபரீதம். சில நிமிடங்களில் பலர் உயிருடன் தரையை நோக்கி வீசப்பட்டார்கள்.

ஆனால், ஏகாதிபத்திய சார்பு ஊடகங்களில், இப்படியான துயரம் ததும்பும் எல்லா நிகழ்வுகளும் நமக்கு வந்து சேர்வதில்லை. கடந்த இருபது ஆண்டுகளில், ஆப்கனில் நிலவிய போர் இரைச்சலில் சிறு சத்தம் கூட நம்மை நோக்கி வரவில்லை. 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற அமெரிக்காவின் கூச்சல் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது. இப்போது அந்தக் கூச்சலும் அடங்கி நிசப்தம் நிலவுகிறது. எதுவும் மாறவில்லை. ஏகாதிபத்திய போர்களால் மனித நாகரீகத்திற்கு அழிவுதான் மிச்சம் என்பது மீண்டும் அம்பலப்பட்டுள்ளது.

**20 ஆண்டுகளில் என்ன நடந்தது?**

2001 ஆம் ஆண்டில், அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். அன்று முதல் சுமார் 7 இலட்சத்து 75 ஆயிரம் அமெரிக்க துருப்புக்களும், நேட்டோ படையினரும் அந்த நாட்டில் குவிக்கப்பட்டார்கள். இந்தப் போரினால் அமெரிக்காவின் தரப்பில் 2 ஆயிரத்து 448 வீரர்களும், சுமார் 4 ஆயிரம் அமெரிக்க ஒப்பந்ததாரர்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 20 ஆயிரத்து 589 பேர் காயமுற்றதாகவும் அமெரிக்க பாதுகாப்புத்துறை விபரங்கள் குறிப்பிடுகின்றன.



இதே போல, ஆப்கானிஸ்தான் மக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை கணக்கிடுவது எளிதாக இல்லை. அமெரிக்க தரப்பில் முன்வைக்கப்படும் 'எதிரிகளின் மரணங்கள்' என்ற கணக்கில் சாதாரண குடிமக்களுடைய மரணங்கள் சேர்க்கப்படுவதில்லை. ஆப்கானிஸ்தானை சேர்ந்த மனித உரிமை செயல்பாட்டாளர்கள், உயிர்ப்பலிகள் 1 இலட்சத்திற்கும் அதிகம் என்கிறார்கள். 3 இலட்சம் பேர் காயமடைந்ததாக தெரிவிக்கின்றனர். இவ்வாறு கொல்லப்பட்டோரில் மிகப் பெரும்பான்மையானவர்கள் ஆயுதம் ஏதும் இல்லாதவர்கள்.

**இரா. சிந்தன்**

அசோசியேட்டட்பிரஸ் என்ற ஊடகம், ஆப்கானிஸ்தானியர்கள் 47 ஆயிரத்து 245 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது. மேலும் இந்த மரணங்களில் 40% வானில் இருந்து வீசப்பட்ட குண்டுகளால் நிகழ்ந்துள்ளன. இவை அல்லாமல், பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும் நடந்துள்ளன.

**ஊழல் மலிந்த ஆட்சி நிர்வாகம்:**

ஆப்கன் யுத்தத்திற்காக அமெரிக்கா சுமார் 2 இலட்சம் கோடி டொலர்களை செலவு செய்திருக்கிறது. 130 கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.87 இலட்சம் கோடி டொலர்கள் (2019 ஆண்டின் புள்ளிவிபரம்). அதாவது இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தித் தொகையில் ஏறத்தாள மூன்றிலிரண்டு பங்கினை அமெரிக்கா இந்த போரில் செலவு செய்துள்ளது. இத்தனை கோடிகளைக் கொட்டி அழித்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

உலகின் மிகவும் வறிய நாடுகளில் ஒன்று ஆப்கானிஸ்தான். அந்த நாட்டின் வெப்பமான தட்பவெப்ப சூழலில், அமெரிக்கப்படைகளும், அதிகாரிகளும் தங்குவதற்காக குளிரூட்டும் வசதி கொண்ட வீடுகளை கட்டினார்கள். உணவை கட்டார், சவூதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகளில் இருந்து வரவழைத்தார்கள். அவர்கள் வீணாக குப்பைத்தொட்டிகளில் வீசும் மிச்ச உணவை சேகரிப்பதற்காக ஆப்கன் ஏழைகள் அல்லாடினார்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்கள், உதவிக்காக அனுப்பப்பட்ட பணத்தை எப்படியெல்லாம் சுருட்டிக் கொண்டார்கள் என்பதை, ஆப்கானிஸ்தானை மறுகட்டமைப்பதற்கான அமெரிக்க சிறப்பு அதிகாரியுடைய அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. "பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், அமெரிக்காவை சேர்ந்த பணக்காரர்கள் இந்த முறைகேடுகளால் இலாபமடைந்தார்கள்." என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

அமெரிக்கா, பணத்தைக் கொடுத்து, ஆப்கனின் அரசியல்வாதிகளை தங்களுக்கு சாதகமாக மாற்றிவிடலாம் என்று நினைத்தது. அமித்கர்சாய் தலைமையில் ஒரு பொம்மை ஆட்சி உருவாக்கப்பட்டது. பின் ஆட்சியாளர்கள் மாறினார்கள். ஆனால், ஒவ்வொரு ஆண்டும் கையூட்டு அதிகரித்தது, 2018 ஆம் ஆண்டை விடவும் 2020 ஆம் ஆண்டில்

கையூட்டு 37 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதே போல ஆப்கானிஸ்தான் தேச இராணுவத்தை ஏற்படுத்தி, சுமார் 3 இலட்சம் வீரர்களை அமெரிக்கா பயிற்றுவித்தது. சுமார் 8800 கோடி டொலர்களை இதற்காக அவர்கள் செலவு செய்தனர். ஆனால், பொய்க் கணக்குகளின் மூலம் இந்த நிதியும் கையாடப்பட்டது. சுமார் 42 ஆயிரம் வீரர்கள் பட்டியலில் இல்லாமலே பயிற்சி அளித்ததாக கணக்கு காட்டப்பட்டது. இப்படியாக, விதவிதமான ஊழல்கள் நமக்கு காணக்கிடைக்கின்றன.

**மக்கள் வாழ்க்கை பாதாளத்தில்:**

2003 ஆம் ஆண்டு முதல் 2012 வரை ஆப்கானிஸ்தான் 9.4 சதவீத வளர்ச்சியை சந்தித்து வந்ததாக உலக வங்கி குறிப்பிடுகிறது. பொதுவாக ஆப்கானிஸ்தானின் பொருளாதாரம், பல்வேறு நாடுகளின் உதவி நிதியை சார்ந்தே இயங்கிக் கொண்டிருந்தது. அந்த நிதி குறைந்ததால், 2015க்கு பின் வளர்ச்சியும் குறைந்துவிட்டது. அதே சமயம், இது 'பொம்மை ஆட்சியின்' நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதிகளின் கணக்கு மட்டுமே ஆகும்.

இந்தக் கணக்கில் சட்டவிரோத போதைப்பொருள் வணிகம் உள்ளடங்கவில்லை. அமெரிக்க ஆதிக்கம் நிலவிய காலத்தில் போதைப்பொருள் வணிகம் அதிகரித்தது. உலகில் கிடைக்கும் ஹெராயினில், 90 சதவீதம் ஆப்கானிஸ்தானில் இருந்து வருகிறது. ஆப்கானிஸ்தானில் இருந்து ஓபியம் வர்த்தகம் 1.2 இலட்சம் கோடி டொலர் முதல் 2.1 இலட்சம் கோடி டொலராக இருக்கலாம் என்பது ஐக்கிய நாடுகளின் கணிப்பாகும். ஆப்கானிஸ்தான் நாட்டு இளைஞர்களில் 10 இல் ஒருவர் போதைக்கு அடிமையாக உள்ளார்.

அதே சமயம், ஆப்கானிஸ்தான் மக்கள் தொகை சுமார் 4 கோடி பேரில் சரிபாதி வறுமையில் உள்ளார்கள். 1.4 கோடிப்பேருக்கு உணவுப் பாதுகாப்பு இல்லை. 20 இலட்சம் குழந்தைகள் அதீத பட்டினியில் வாடுகிறார்கள்.

2016 ஆம் ஆண்டில், கல்வி அமைச்சராக இருந்த அசதுல்லா ஹனிப்பல்கி ஒரு திருத்தப்பட்ட பேட்டியைக் கொடுத்தார். அதன்படி "மொத்தம் உள்ள 17 ஆயிரம் பள்ளிகளில் 60 இலட்சம் மாணவர்கள் மட்டுமே படிக்கிறார்கள். முன்பு சொன்னது போல 1.1 கோடி அல்ல". இப்போதும் ஆப்கனில் செயல்படும் பள்ளிகளில் 41% கட்டடம் இல்லாதவை. ஆப்கனின் கல்வி அறிவு விகிதம் 43 மட்டுமே ஆகும். 65% பகுதிகளுக்கு மின்சாரமே இல்லை. அமெரிக்காவினால், அடிப்படையான கட்டமைப்புகளை கூட அந்த நாட்டில் உருவாக்க முடியவில்லை.

பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த பிஸ்மில்லா மொஹமதி, அமெரிக்க படைகள் வெளியேறிய பின் தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவு செய்துள்ளார். "பணக்காரனின் அரசாங்கத்திற்கும், அவன் ஆட்களுக்கும் என்ன தைரியம். எங்கள் கைகளை பின்னால் கட்டிவிட்டு, சொந்த நாட்டையே விற்றுவிட்டார்கள்". இதுதான் ஆப்கானிஸ்தானில் நிலவக்கூடிய உண்மையான உணர்வு ஆகும். அமெரிக்காவையும், அதன் கைப்பாவையான அரசாங்கத்தையும் மக்கள் வெறுக்கிறார்கள்.

**ஆட்சி மாற்றமும், விளைவுகளும்:**

இப்போது ஆப்கானிஸ்தான் மீண்டும் தலிபான்கள் வசம் சென்றுள்ளது. பிற ஆயுதக் குழுக்களின் வசம் இருந்த பகுதிகளை பெரும்பாலும் கைப்பற்றிவிட்டார்கள். புதிய அரசாங்கத்தையும், அமைச்சர்களையும் அறிவித்துள்ளார்கள். புதிய ஆட்சி, தலிபான் மட்டுமே வழிநடத்துவதாக இருக்கும் என்று தெரிகிறது. அமெரிக்கஆக்கிரமிப்பின் போதும், தலிபான்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதிகள் இருந்தன. அந்தப் பகுதிகளில் நிர்வாகத்தில் ஒப்பீட்டளவில் ஊழல் குறைவாக இருந்தது. பள்ளிகள் செயல்பாட்டில் முன்னேற்றம் இருந்தது. எனவே தலிபான்கள் கை ஓங்குவதற்கு அதுவும் ஒரு காரணமாக உள்ளது. மேலும் மக்களிடையே ஆக்கிரமிப்பு எதிர்ப்பு உணர்வு கூடியுள்ளது, தலிபான்களுக்கு சாதகமாக உள்ளது.

தலிபான்கள் பிற்போக்கான வலதுசாரி சக்திகள்தான். கடந்த காலத்தில் இருந்து அவர்களின் தன்மை பெரிதாக மாறியிருக்க வாய்ப்பில்லை. மேலும் அது உறுதியான ஒரே இயக்கமும் அல்ல. அமெரிக்காவிடம் பயிற்சி பெற்ற இராணுவ வீரர்கள் மற்றும் போர் விருப்பம் கொண்ட இனத்தலைவர்களுடைய கதம்பமாக பல்வேறு சக்திகளின் கூட்டமைப்பாகவே அது உள்ளது. எனவே அவர்கள் அமைத்துள்ள இஸ்லாமிய அமீரகம் பெரிய மாற்றம் எதையும் மக்கள் வாழ்வில் கொண்டுவர வாய்ப்பில்லை. பெண்கள், குழந்தைகள் நிலைமையில் பிற்போக்கான தாக்குதல் ஏற்படவும் வாய்ப்புண்டு.

வலதுசாரி சக்திகளான தலிபான் உருவாக்கத்திற்கும் விதை போட்டது அமெரிக்க ஏகாதிபத்தியம்தான். சோவியத் ஒன்றியத்தோடு ஒத்துழைத்த முற்போக்கான அரசாங்கத்தை நிலை குலையைச் செய்வதற்காகவே இந்த சக்திகளுக்கு அமெரிக்கா நிதியும், பயிற்சியும் கொடுத்தது.

ஆப்கனை சேர்ந்த முற்போக்காளர்களும், மனித உரிமை செயல்பாட்டாளர்களும், ஆப்கன் மக்கள் நல்வாழ்வை அச்சுறுத்தும் மூன்று சக்திகளை பட்டியலிடுகிறார்கள். அதில் முதலாவது, அமெரிக்காவும், பிற நேட்டோ நாடுகளும் செய்த ஆக்கிரமிப்பு. இரண்டாவது, தலிபான்கள், மூன்றாவது, ஆப்கனில் இயங்கும் மற்ற பிற்போக்கு சக்திகள். இப்போதைக்கு அமெரிக்காவும் நேட்டோ படைகளும் அகன்றுள்ளன. ஒரு எதிரி அகன்றது அந்த நாட்டு மக்களுக்கு ஆறுதலான செய்தியாகும். அதே சமயம் முற்போக்கு சக்திகளின் போராட்டம் தொடர வேண்டிய தேவை உள்ளது. அதுதான் உண்மையான முன்னேற்றத்தை சாத்தியமாக்கும்.

**அண்டை நாடுகளின் அணுகுமுறை:**

ஆப்கானிஸ்தான் குறித்தான இந்தியாவுடைய அணுகுமுறை, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிலைப்பாட்டை சார்ந்ததாகவே இருந்து வந்தது. எனவே, அமெரிக்காவின் தவறான கணிப்புகளை, இந்தியாவும் பின்பற்றியதாக தெரிகிறது.

இந்திய உளவுத்துறையின் அதிகாரியாக செயல்பட்டு ஓய்வுபெற்ற ஏ.எஸ்.துலத் "நாம் (இந்தியா) ஆப்கானிஸ்தானில் நிறைய பணத்தை முதலீடு செய்துள்ளோம். எனவே நாம் அங்கே சென்றாக வேண்டும். அந்த நாட்டில் ஆட்டம் மாறிவிட்டது. ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் கைகோர்ப்பதை பார்க்க முடிகிறது. ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர், இந்த மேசையில் இந்தியாவிற்கு இடமில்லை என்று தெரிவிக்கிறார். இது நமக்கு இனிமையான செய்தி அல்ல" அணிசேரா நாடு என்பதிலிருந்து விலகி அமெரிக்காவின் இளைய பங்காளியாக முயல்வது நம் நாட்டுக்கு நன்மை செய்யாது என்பதை அவருடைய கருத்தில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

இதுவரை 300 கோடி டொலர்களை ஆப்கானிஸ்தானுடைய

உள்கட்டமைப்பில் இந்தியா செலவு செய்திருக்கிறது. மேலும், ஆப்கானிஸ்தான் நமக்கு எல்லை நாடாகவும் இருப்பதால், இந்திய நலனை மையப்படுத்தியும், ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நல்வாழ்வை உறுதி செய்யும் விதத்திலும் நமது அணுகுமுறை அமைவது அவசியம்.


சோசலிச நாடான சீனாவின் அணுகுமுறை உலக நாடுகளால் உற்று நோக்கப்படுகிறது. அவர்கள் ஆப்கானிஸ்தானில் நடந்துவரும் மாற்றங்களை விரைவாக புரிந்துகொண்டு செயல்பட்டார்கள்.

சீனாவிற்கும் பிற நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் பயங்கரவாத இயக்கங்களின் செயல்பாட்டுக்கு ஆப்கானிஸ்தானை பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்ற உறுதியை பெற்றார்கள். இது மிகவும் முக்கியமான நகர்வு ஆகும். மேலும், அமெரிக்காவை போல, இன்னொரு நாட்டில் வலுக்கட்டாயமாக சுதந்திரம் அல்லது ஜனநாயக ஆட்சி முறையை வெளியில் இருந்து திணிக்க முடியாது என்பதையும். அப்படியான முழக்கங்கள் போலியானவை என்பதையும் சீனா தொடர்ந்து சொல்கிறது.

சீனா, ரஷ்யா, ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மீண்டும் ஆப்கானிஸ்தானில் ஒரு உள்நாட்டு யுத்த சூழல் உருவாவதை விரும்பவில்லை. எல்லா பயங்கரவாத அமைப்புகளையும் தலிபான் அமைப்பால் கட்டுப்படுத்த முடியுமா என்பது அத்தனை எளிதல்ல. அது சர்வதேச சக்திகளின் நகர்வை பொருத்தே உள்ளது. அதே சமயத்தில் தலிபான்கள், ஆட்சி நிர்வாகத்தின் சவாலை எதிர்கொண்டு நீடிக்க முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும்.

அண்டை நாடுகளும், பிற நாடுகளும் தங்களுக்கு எது நன்மை என்ற நிலையில் இருந்தே ஆப்கானிஸ்தானோடு உறவாடி வருகிறார்கள். சாங்காய் கூட்டுறவு அமைப்பு நடத்திய கூட்டத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கீழ்க்காணும் 3 திட்டங்களை முன்வைத்தார்.

1. சுதந்திரமான, நடுநிலையான, ஒன்றுபட்ட, அமைதியான, மக்களாட்சி நிலவும், மறுமலர்ச்சி காணும் தேசம்
2. குடிமக்களுக்கும், அரசு பிரதிநிதிகளுக்கும் எதிரான வன்முறையும், பயங்கரவாத தாக்குதலும் நிறுத்தப்பட வேண்டும். முரண்பாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பது, இனவழி குழுக்கள் அனைவரின் நலன்களையும் மதிக்க வேண்டும்.
3. பயங்கரவாதம், பிரிவினைவாதம், தீவிரவாத அச்சமூட்டல் இல்லாத நிலையை அண்டை நாடுகளுக்கு உறுதி செய்ய வேண்டும்.




இப்போதைக்கு ஆப்கானிஸ்தானில் எதிர்பார்க்க முடிந்தது இவைதான்.

**தொடரும் யுத்தம்:**

மாற்றங்கள் விரைவாக நடந்து கொண்டிருக்கும் பின்னணியில், தனது துருப்புக்களை திரும்பப் பெற்றுக் கொண்டே, நவீன வடிவிலான தாக்குதல்களை தொடங்கியிருக்கிறது அமெரிக்கா.

ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றப் போகிறார்கள் என்பது தெளிவானதுமே, சர்வதேச நிதி நிறுவனம் ஆப்கனுக்கு அனுப்ப வேண்டிய 3700 கோடி டாலர்கள் நிதியை நிறுத்தி வைத்தது. அந்நியச் செலாவணியை மாற்றித்தரும் நிறுவனமான வெஸ்டர்ன் யூனியன் தன்னுடைய சேவைகளை நிறுத்திக்கொண்டது. இதனால் ஆப்கானிஸ்தானின் செலாவணி வீழ்ச்சி முகத்தை எதிர்கொண்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் ரிசர்வ் நிதி 900 கோடி டொலர்கள் நியூயார்க்கின் வசம் இருக்கின்றன. அதையும் அமெரிக்கா தன் பிடிக்குள் வைத்துக் கொண்டு இழுத்தடிக்கிறது. சிறப்பு உரிமையாக உலக நாடுகளுக்கு தரப்படும் ஐ.எம்.எப் நிதியையும் பெற முடியாத வகையில் தடை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆப்கானிஸ்தான் மக்களுக்கு சொந்தமான பணத்தை, மிக அத்தியாவிசயமான காலத்தில் கொடுக்காமல் தடுப்பதும் நவீன போர் வடிவமே ஆகும். அதனை அமெரிக்கா தொடர்கிறது.

இவ்வாறு செய்வதன் மூலம் ஆப்கானிஸ்தானில் தான் விரும்பக் கூடிய மாற்றத்தை ஏற்படுத்தலாம் என அமெரிக்கா கணக்குப்போடும். சமீப ஆண்டுகளில், தனக்கு சாதகமான அரசாங்கங்களை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்து தோற்று வருவதை கவனிக்க வேண்டும். ஈராக், லிபியாவை தொடர்ந்து இப்போது ஆப்கானிஸ்தானின் மாற்றங்களும் அதையே காட்டுகின்றன. அமெரிக்க தலையீட்டின் காரணமாக, சாமானிய குடிமக்களுக்குத்தான் வேதனைகள் உருவாகின்றன. இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கை வாழ்வு நெருக்கடியில் தள்ளப்பட்டுள்ளது.

இனி வரும் நாட்களில் அமெரிக்கா, ஒரு நிரந்தரமான இராணுவ பிரிவை அறிவித்து, குவைத் தளத்தில் வீரர்களை இருப்பு வைக்கக் கூடும். எப்போது வேண்டுமானாலும் ஆப்கானிஸ்தானிற்கு பறந்து சென்று, கொலை செய்து வருவதைப் போல ஏற்பாடு செய்யலாம். ஏகாதிபத்திய ஆதிக்க சக்திகளுக்கு போர் வெறி அடங்கப்போவதில்லை.

---

“விமர்சனக் கண் கொண்டு பரிசீலிக்க வேண்டிய உண்மைகளைப் புரிந்து கொள்ளாமலே, ஒரு கம்யூனிஸ்ட், தயாராக வரையறுத்து வைக்கப்பட்டுள்ள முடிவுகளைத் தெரிந்து கொண்டுவிட்ட ஒரே காரணத்தால், தனது கம்யூனிச அறிவை மெச்சிப் புகழ்வாராயின், உண்மையிலேயே அவரை பரிதாபத்துக்குரிய ‘கம்யூனிஸ்ட்’ என்றே அழைக்க வேண்டும்”

**-லெனின்**

# வெள்ளிக்கிரகத்தில் உயிர்கள்? - பூமிக்கு வெளியே வாழும் உயிர்கள் குறித்த ஆய்வின் புதிய கண்டுபிடிப்பு

பூமிக்கும் சூரியனுக்கும் இடையே அமைந்துள்ள கோள்களில் ஒன்றான வெள்ளியில் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆய்வு ஏன் அதிக கவனத்தைப் பெறுகிறது என்றால் பூமிக்கு வெளியே உயிர்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறைந்த இடமாக வெள்ளியை ஆய்வாளர்கள் கருதியதில்லை.

பூமியுடன் ஒப்பிடும் பொழுது இதனை ஒரு நரகக்குழி என்றே கூறலாம்.

வெள்ளியின் வளி மண்டலத்தில் 96% காபனீரொட்சைட் வாயுதான் நிறைந்திருக்கிறது. பசுமைக்குடில் வாயுக்கள் விளைவால் இதன் வெப்பநிலையும் மிகவும் அதிகமாக உள்ளது.

வெள்ளியின் மேற்பரப்பின் வெப்பநிலை 400 பாகை செல்சியஸ் அளவைவிட அதிகம்.

வெள்ளிக்கு அனுப்பப்பட்ட விண்கலன்கள் தரையிறங்கிய சில நிமிடங்களே அங்கு தாக்குப்பிடித்துள்ளன. அதன்பின்பு அவை செயலிழந்து விட்டன.

ஆனால் அந்த மேற்பரப்பில் இருந்து 50 கிலோமீட்டர் உயரத்தில் உயிர்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக புதிய ஆய்வு கூறுகிறது.

**வெள்ளியின் வளிமண்டலத்தில் பொஸ்பைன் (Posphine – $PH_3$) வாயு**

வெள்ளியின் வளி மண்டலத்தில் நுண்ணுயிர்கள் வாழ உதவும் வாயு ஒன்றை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

பொஸ்பைன் எனப்படும் அந்த வாயுவின் மூலக்கூறு ஒரு பொஸ்பரஸ் மற்றும் மூன்று ஐதரசன் அணுக்கள் ஆகியவற்றால் ஆனது.

பென்குயின் போன்ற உயிரினங்களின் குடல் நாளத்தில் வசிக்கும் நுண்ணுயிர்கள், ஒட்சிசன் அளவு மிகவும் குறைவாக இருக்கும் உயிர்ச்சூழல் ஆகியவற்றில் வாழும் உயிரினங்கள் ஆகியவற்றால் இந்த



**சிலியில் உள்ள அட்டகாமா (Atacama) பாலைவனத்தில் உள்ள தொலைநோக்கிகள்**

பொஸ்பைன் வாயு உருவாக்கப்படும்.

இந்த வாயுவை செயற்கையாகவும் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய முடியும்.

ஆனால் வெள்ளிக்கிரகத்தில் பென்குயின்களும் இல்லை, தொழிற்சாலைகளும் இல்லை.

இப்படிப்பட்ட சூழலில் வெள்ளியின் மேல் பரப்பில் இருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் பொஸ்பைன் வாயு இருப்பதாக பிரிட்டனில் உள்ள கார்டிஃப் பல்கலைக்கழகத்தின் (Cardiff University) பேராசிரியர் ஜேன் கிரீவ்ஸ் (Prof Jane Greaves) மற்றும் அவரது சக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தங்கள் ஆய்வின் முடிவுகளை 'இயற்கை வானியல்' (Nature Astronomy) எனும் அறிவியல் சஞ்சிகையிலும் அவர்கள் பதிப்பித்துள்ளனர்.

வெள்ளி கோளின் மேற்பரப்பில் மிகவும் கணிசமான அளவில் பொஸ்பைன் (Phosphine) வாயு கண்டறியப்பட்டுள்ளது.

உயிரினங்கள் அல்லாத ஒரு மூலத்திலிருந்து இந்த வாயு உருவாகி இருப்பதற்கு வாய்ப்பில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அப்படியானால் உயிருள்ள ஏதாவது ஓர் உயிரினத்தில் இருந்து அந்த வாயு உருவாகி இருப்பதற்கு வாய்ப்புள்ளது என்பது இதன் பொருள்.

'என் தொழில்முறை வாழ்க்கை முழுதும் இந்த பேரண்டத்தில் வேறெங்கும் உயிர்கள் உள்ளதா என்பதை அறியும் நோக்கிலேயே நான் ஆராய்ச்சி செய்து வருகிறேன். அதற்கு வாய்ப்புள்ளது என்பது மிகவும் பிரமிப்பூட்டும் வகையில் உள்ளது,' என்கிறார் பேராசிரியர் கிரீவ்ஸ்.

'ஒருவேளை நாங்கள் தவறான முடிவுக்கும் வந்து இருக்கலாம் அப்படி இருந்தால் எங்கள் ஆய்வில் என்ன குறை உள்ளது என்பதை சுட்டி காட்டுவதை நாங்கள் ஊக்குவிக்கிறோம். எங்கள் ஆய்வு முடிவுகள் மற்றும் தரவுகள் ஆகியவற்றை அனைவரும் அணுக முடியும் ஆய்வு முடிவுகளை கேள்விக்கு உட்படுத்த வேண்டும் அறிவியல் அப்படித்தான் இயங்குகிறது,' என்கிறார் அவர்.

இந்தப் பேராசிரியர் மற்றும் அவரது குழுவினர் ஹவாயில் உள்ள ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் தொலைநோக்கி மூலம் வெள்ளி கோளின் மேற்பரப்பில் பொஸ்பீன் இருப்பதை கண்டுபிடித்தனர்.

சிலியில் உள்ள அட்டகாமா (Atacama) பாலைவனத்தில் உள்ள தொலைநோக்கிகளை (James Clerk Maxwell Telescope) வைத்தும் இதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

**வெள்ளியில் வேற்று கிரக உயிர்கள் - ஆய்வு முடிவு மீது சந்தேகம்**

இந்த அனுமானத்தின் மீதான சந்தேகங்களும் எழாமலில்லை. அந்த ஆய்வுக் குழுவினர் தங்கள் ஆய்வுகள்

குறித்து முடிவுகளை தெரிவிப்பதில் மிகவும் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் இருக்கின்றனர்.

வெள்ளியில் உயிரினங்கள் வாழ்வதாக தாங்கள் கண்டறிந்து விட்டோம் என்று அவர்கள் கூறவில்லை. வாய்ப்பு உள்ளது என்றே கூறுகின்றனர்.

வெள்ளியின் மேற்பரப்பிலுள்ள மேகங்கள் மிகவும் அடர்த்தியானவை. அந்த மேகங்களில் 75 சதவிகிதம் முதல் 95 சதவிகிதம் வரை சல்ஃபூரிக் அமிலம் உள்ளது. பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு இந்த அமிலம் ஏற்றதல்ல.

இந்த ஆராய்ச்சியில் பங்கேற்ற உயிரியலாளர் முனைவர் வில்லியம் பெய்ன்ஸ் (Dr William Bains), அமெரிக்காவில் உள்ள மசாசூசெட்ஸ் தொழில் நுட்பக் கல்லூரியில் (Massachusetts Institute of Technology) பணியாற்றுகிறார்.

எரிமலைகள், மின்னல், விண்கற்கள் ஆகியவை வெள்ளி கிரகத்தில் பொஸ்பைன் வாயு உருவாக காரணமாக இருந்திருக்கலாம் எனும் நோக்கில் இவர் ஆய்வுகளை மேற்கொண்டார்.

ஆனால் மேற்கண்டவற்றின் மூலம் நிகழும் இரசாயன மாற்றங்கள் வெள்ளியின் வளிமண்டலத்தில் உள்ள பொஸ்பைன் வாயுவை உருவாக்க 10,000 மடங்கு வலிமை குறைந்தவையாக இருக்கின்றன என்று அவர் கூறுகிறார்.

வெள்ளி கிரகத்தில் ஒருவேளை நுண்ணுயிர்கள் இருந்தால் அவை சல்ஃபூரிக் அமிலத்தின் பாதிப்பில் இருந்து தப்புவதற்காக மிகவும் மாறுபட்ட ஒரு உயிர்வேதியியல் கோட்பாட்டை பின்பற்றலாம் அல்லது அதில் இருந்து தப்புவதற்கான கவசம் எதையேனும் பரிமாணம் அடைந்திருக்கலாம் என்கிறார் பெய்ன்ஸ்.

**பூமிக்கு வெளியே உயிர்கள் சாத்தியமா?**

ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் (Oxford University) பணியாற்றும் முனைவர் கொலின் வில்சன் (Dr Colin Wilson) ஐரோப்பிய விண்வெளி முகமை 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' (Venus Express) எனும் வெள்ளி ஆராய்ச்சித் திட்டத்தில் பணியாற்றினார்.

பேராசிரியர் கிரீவ்ஸின் கண்டுபிடிப்பு அந்தக் கோள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் புதிய அலையை உருவாக்கும் என்று அவர் கூறுகிறார்.

'இது மிகவும் வியப்பாக உள்ளது. ஒருவேளை தொலைநோக்கிகளின் தவறான கணிப்பால் அங்கு பொஸ்பைன் இருப்பதாகக் கருதப்பட்டாலும் இது புதிய கண்டுபிடிப்புகளுக்கு இட்டுச்செல்லும். ஆனால் அப்படி தவறு நிகழ்ந்து இருக்க வாய்ப்பில்லை,' என்று அவர் கூறுகிறார்.

வெள்ளியின் மேகங்களின் மேல் அடுக்குகளில் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல் இருந்தால் அது ஓர் ஒளிமயமான கண்டுபிடிப்பு. உயிர்கள் வாழ்வதற்கு பூமி போன்ற ஒன்று வேண்டும் என்று அவசியமில்லை. நமது பால் வெளியிலிருக்கும் வெள்ளி போன்ற அதீத வெப்பம் வாய்ந்த கோள்களில் கூட உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியம் இருக்கிறது என்கிறார் பிரிட்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் (University of Westminster) பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லெவிஸ் டார்ட்னெல் (Prof Lewis Dartnell) .

**- ஜொனாதன் அமொஸ் (Jonathan Amos)**

## வளர்ச்சியடைந்த நாடுகளிடம் 1.2 பில்லியன் கொரோனா தடுப்பூசிகள் கூடுதலாக இருக்கும்

இந்த ஆண்டு இறுதிக்குள் வளர்ந்த நாடுகளிடம் *1.2* பில்லியன் கூடுதல் கொரோனா தடுப்பூசிகள் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி தொடர்பான புள்ளிவிவரங்களை அலசி ஆராயும் சர்வதேச நிறுவனம் ஒன்று இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதன்படி வளர்ச்சியடைந்த நாடுகளில் செப்டம்பர் மாத நிலவரப்படி *500* மில்லியன் கொரோனா தடுப்பூசிகள் உள்ளன. இவற்றில் *360* மில்லியன் ஏழை நாடுகளுக்குக் கொடுக்கப்பட உள்ளன. இருப்பினும், இந்த ஆண்டு இறுதிக்குள் அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், கனடா, ஜப்பான் உள்ளிட்ட வளர்ச்சியடைந்த நாடுகளிடம் *1.6* பில்லியன் டோஸ் கூடுதல் தடுப்பூசிகள் இருக்கும். அவற்றினைத் தானமாக வழங்குவது தொடர்பான திட்டங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

உலகளவில் கொரோனா தடுப்பூசியை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதில் உள்ள பேதத்தை சீர் செய்யும் வகையில், ஐ.நா.வின் துணையுடன் இயங்கும் கோவாக்ஸ் (COVAX) அமைப்பு *190* நாடுகளுக்கும், குறிப்பாக *92* குறைந்த வருவாய் கொண்ட நாடுகளுக்கும் தடுப்பூசியை கொண்டு சேர்க்க வேண்டும். அதுவும் குறிப்பாக 20% மக்களுக்காவது தடுப்பூசியை கொண்டு சேர்க்க வேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால், பெரும் பணக்கார நாடுகள் தடுப்பூசி தயாரிப்பு நிறுவனங்களுடன் கொண்டுள்ள தொடர்பால், தடுப்பூசி கோவாக்ஸ் அமைப்புக்கு வந்து சேர்வதில் சிக்கல் இருக்கிறது. இதனால் தான் தடுப்பூசி பதுக்கல் நடைபெறுகிறது.

*05.09.2021* அன்று ஜி20 சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் தடுப்பூசி ஏற்றத்தாழ்வு குறித்துப் பேசிய உலக சுகாதார மையத்தின் இயக்குநர் டெட்ரோஸ் அதோனம்(Tedros Adhanom), 'தடுப்பூசி பேதம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. உலகம் முழுவதும் இதுவரை 500 கோடி பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 75% தடுப்பூசிகள் *10* நாடுகளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவில் தடுப்பூசித் திட்டம் 2% மட்டுமே செயல்படுத்தப்பட்டுள்ளது' என்று கூறினார். ஆப்பிரிக்க நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத் தலைவர் ஜோன் கெங்காசோங் (John Nkengasong currently serves as the first Director of the Africa Centres for Disease Control and Prevention) கூறும்போது, 'ஆப்பிரிக்காவில் கொரோனா தடுப்பூசி திட்டம் செயல்பாடு மிகுந்த ஏமாற்றமளிக்கிறது' என்று கூறினார்.


ஜி20 மாநாட்டில் பேசிய பிரிட்டன் முன்னாள் பிரதமர் கோர்டன் பிரவுன்(Gordon Brown), 'பணக்கார நாடுகள் தடுப்பூசிகளைப் பதுக்கிவைத்துக் கொள்வது நெறியற்ற செயல். ஜி7 நாடுகளின் தலைவர்கள் உடனடியாக தங்கள் வசம் உள்ள கூடுதல் தடுப்பூசிகளை ஆப்பிரிக்க நாடுகளுக்கு அனுப்பிவைக்க வேண்டும். நாம் இப்போது புதுவிதமான போட்டியில் இருக்கிறோம். மக்களுக்கு விரைவில் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்பதுதான் அந்தப் போட்டி. ஆனால் இந்தப் போட்டியில் மேற்கத்திய நாடுகளின் கை ஓங்கி இருக்கிறது' என்று தெரிவித்தார்.

# கார்பனீரொக்சைட் வெளியேற்றத்திற்கும் புவி வெப்பமயமாதலுக்கும் என்ன தொடர்பு?

பல ஆண்டுகளாகவே, கார்பனீரொக்சைட் (Carbon dioxide - $CO_2$) வெளியேற்றத்தைக் குறைக்க வேண்டும் என்ற குரல் உலகெங்கிலும் அதிகமாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது. பல நாடுகளும், தனியார் நிறுவனங்களும் கார்பனீரொக்சைட் வெளியேற்றத்தைக் குறைக்கும் பொருட்டு நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றன. முக்கியமாக பெட்ரோல் மற்றும் டீசல் வாகன உற்பத்தி நிறுவனங்கள் பலவும் அடுத்த சில ஆண்டுகளில் முழுவதுமாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களையே தயாரிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கின்றன. எல்லா பக்கங்களிலிருந்தும் குரல்கள் எழுகின்றன. நாமும் கார்பனீரொக்சைட் வெளியேற்றம், புவி வெப்பமயமாதல் என்ற வார்த்தைகளை தினமும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், கார்பனீரொக்சைட் வெளியேறுவதால் புவி ஏன் வெப்பமாகிறது, அதனால் பூமியில் வாழும் உயிரினங்களுக்கு என்ன பிரச்னை என்பன குறித்த சந்தேகங்களும், குழப்பங்களும் உங்களுக்கு எழுந்திருக்கிறதா? கார்பனீரொக்சைட் வெளியேற்றத்துக்கும் புவி வெப்பமயமாதலுக்கும் என்ன தொடர்பு என்பதைக் கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்.

**கரிம வாயுவும், புவி வெப்பமாதலும்!**

சூரியனிலிருந்து வரும் வெப்பம் புவியை அடைந்தவுடன், அது பெருமளவு பிரதிபலிக்கப்பட்டு மீண்டும் வானுக்கே செல்லும். அப்படிப் பிரதிபலிக்கப்படும் வெப்பம் பூமியின் வளிமண்டலத்தை விட்டு வெளியேற விடாமல் தடுக்கும் ஆற்றல் கரிம வாயுவிற்கு, அதாவது கார்பனீரொக்சைட்டுக்கு உண்டு. இவ்வாறு வெப்பத்தைத் தடுக்கும் வாயுக்களுக்கு பசுங்குடில் வாயுக்கள் (Greenhouse gases) என்று பெயர். கார்பனீரொக்சைட் (Carbon dioxide), மீத்தேன் (Methane – $CH_4$), நைதரசன் ஒக்சைட் (Nitrous Oxide - $N_2O$), ஓசோன் (Ozone – $O_3$) மற்றும் நீராவி (Water vapour – $H_2O$) ஆகியவை பசுங்குடில் வாயுக்கள். இவற்றில் கார்பனீரொக்சைட்தான் பசுங்குடில் வாயுக்களில் அதிகளவில் வளிமண்டலத்தில் நிறைந்திருக்கிறது.




அதனால் புவியை வெப்பமடையப் பண்ணுவதில் கார்பனீரொக்சைட்தான் பிரதான பங்கை வகிக்கின்றது. இந்த நிலக்கரி, எண்ணெய் போன்ற நிலத்தடி எரிபொருட்களை நாம் அதிகளவில் உபயோகப்படுத்துவதன் மூலம் கார்பனீரொக்சைட் அதிகளவில் வெளியிடப்படுகின்றது.


*பிரசன்னா ஆதித்யா*


இந்தப் பசுங்குடில் வாயுக்களால் தான் பூமி உயிரினங்கள் வாழத் தகுந்த இடமாக இருக்கிறது. பசுங்குடில் வாயுக்கள் இல்லையெனில் சூரியனில் இருந்துவரும் வெப்பம் பிரதிபலித்தலின் காரணமாக, பூமி பனி படர்ந்த பிரதேசமாக மாறியிருக்கும். ஆனால், அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு என்பது போல், பசுங்குடில் வாயுக்கள் வளிமண்டலத்தில் அதிக அளவில் சேர்ந்ததன் காரணமாக பூமி அதிகமாகச் சூடாகத் தொடங்கியது. இதனால்தான் புவி வெப்பமாதலுக்குக் கார்பன் வெளியேற்றம் காரணமாக இருக்கிறது.

**புவி வெப்பமயமாதலினால் ஏற்படும் விளைவுகள்!**

புவி வெப்பமாதலால், புவியின் சராசரி வெப்பநிலை இப்போது 1.6 பாகை செல்ஸியஸ் அளவு அதிகரித்திருக்கிறது. இதனால் பனிக்கட்டிகள் வேகமாக உருகி வருகின்றன. இதன் மூலம் ஆண்டிற்கு 3.2 மிமீ அளவு கடல் மட்டம் உயர்கிறது. சூரியனில் இருந்து வரும் வெப்பத்தை வளிமண்டலத்திற்குப் பிரதிபலிப்பதில் பனிக்கட்டிகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. பனிக்கட்டிகள் உருகுவதால், வெப்பம் நிலத்திலேயே உள்வாங்கப்பட்டு, பூமி இன்னும் வெப்பமாகும். புவி வெப்பமடைவதால் பல விலங்கினங்கள் பாதிக்கப்படும். எல்லா விலங்கினங்களாலும் எல்லா சூழ்நிலைகளிலும் வாழ முடியாது. குளிர் பிரதேசங்களில் வாழும் விலங்கினங்கள் இந்தப் புதிய மாற்றத்தைத் தாங்க முடியாமல் அழியும் சூழ்நிலை கூட ஏற்படலாம்.

தற்போதே பல விலங்கினங்கள் வெப்பம் குறைவான இடங்களைத் தேடித் புலம்பெயரத் தொடங்கிவிட்டன. புவி வெப்பமாதலால் ஏற்படும் காலநிலை மாற்றத்தால், பூமியின் சில இடங்களில் அளவுக்கு அதிகமான கடுமையான மழைப்பொழிவு ஏற்படும். சில இடங்களில் துளியளவும் மழையின்றி கடுமையான வறட்சி நிலவும். இதனால், பயிர்கள் செழிக்காமல் உணவுப் பஞ்சம் ஏற்படும். இவற்றிலும், அதிகமாகப் பாதிப்புக்குள்ளாக இருப்பது ஏதும் அறியாத விலங்கினங்கள் தான்.

இதே நிலையில் புவி தொடர்ந்து வெப்பமடைந்தால், அடுத்த நூறு ஆண்டுகளில் 26 இலிருந்து 82 செ.மீ வரை கடல் மட்டம் உயரக்கூடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். புயல்களும், சூறாவளிகளும் வலுப்பெறும். தண்ணீர் பஞ்சம் தான் நம் எதிர்காலமாக இருக்கும். உயரும் வெப்பநிலைக்குத் தகவமைத்துக் கொள்ள முடியாத விலங்குகள் அழிவின் பாதைக்குச் செல்லும்.

**பாரிஸ் ஒப்பந்தம்!**

புவி வெப்பமாதலைத் தடுக்கவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும்

196 நாடுகள் இணைந்து 2015 ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதன்படி அடுத்த அரை நூற்றாண்டுக்குள் புவி வெப்பமாதலை 2 பாகை செல்சியஸுக்கும் குறைவாக இருக்கும்படி கட்டுப்படுத்த வேண்டும். கார்பனீரொக்சைட் வெளியேற்றத்தை முற்றிலுமாகக் குறைக்க வேண்டும். அந்த ஒப்பந்தத்தின்படி 2020 இற்குள், கார்பனீரொக்சைட் வெளியேற்றத்தைத் தடுக்க என்ன விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்ற அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையில் மற்ற நாடுகள் சமர்ப்பிக்க வேண்டும்.

75 சதவிகித கார்பனீரொக்சைட் வெளியேற்றத்திற்கு, குறிப்பிட்ட 20 நாடுகள் தான் காரணமாக இருக்கின்றன. அவற்றில் அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் முன்னணியில் இருக்கின்றன. கார்பனீரொக்சைட் வெளியேற்றம் அதிகம் இல்லாத சூரிய சக்தி, மின்சாரம் ஆகியவற்றை மக்கள் அதிகம் உபயோகப்படுத்த அனைத்து நாடுகளும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், புதிதாக உருவாக்கப்படும் தொழில்நுட்பங்கள் வெப்பமாதல் காரணிக்கு எந்த வகையிலும் உதவியாக இருக்கக்கூடாது எனத் திட்டமிடப்பட்டன.

**என்னதான் தீர்வு?**

வெப்பமாதலைத் தடுப்பதற்கான தீர்வைப் புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை. கார்பனீரொக்சைட் வெளியேற்றத்தைக் குறைக்க வேண்டும், ஏற்கெனவே நாம் வெளியிட்ட அதிகப்படியான பசுமைக்குடில் வாயுக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தனியாக வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம், வீட்டில் உபயோகிக்கும் ஏசி, குளிர்சாதனங்களின் பயன்பாட்டைக் குறைக்கலாம்.

பாரிஸ் ஒப்பந்தம் போடப்பட்டதுதான், ஆனால் முழுமையான நடவடிக்கைகள் அனைத்து நாடுகளிலும் எடுக்கப்படுகிறதா என்ற கேள்விக்குப் பதில் இல்லை. காடுகளை உருவாக்க வேண்டும் என நாம் பேசிக் கொண்டு இருக்கும் வேளையில், பல இலட்சம் ஹெக்டேர் (ஒரு ஹெக்டேர் 10,000 சதுர மீட்டர் அல்லது 2.471 ஏக்கருக்கு சமமானது) காடுகள் அழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. தனி வாகனங்களின் விற்பனை தினமும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. புவி வெப்பமாதல் பற்றி நாம் பேசிக்கொண்டே இருக்க வேண்டியது தான். இங்கே கேள்வி, 'என்னதான் தீர்வு?' என்பது அல்ல, 'எப்போது நாம் செயல்படப்போகிறோம்?' என்பதுதான்.

# வண்டுகளிடம் கற்ற சிகிச்சை முறை!

மூளையில் இரத்தக் கசிவு போன்றவை ஏற்பட்டால், அதனை அடைத்துப் பிற பகுதிகளில் பாதிக்கப்படாமல் செய்வது அவசியம். இதற்கு, மூளையின் நெளிவு சுளிவான பகுதிகளுக்குள் துல்லியமாகக் குழாய்களைச் செலுத்தி, அக்குழாய்களின் வழியே துளையை அடைக்கும் பிளாட்டினம் கம்பிகளை அனுப்பிப் பொருத்துவர். ஆனால், மூளையின் சில சிக்கலான பகுதிகளில் இந்த சிகிச்சை முறை சாத்தியமாவதில்லை.

இந்தக் குறையைப் போக்க, இயற்கை படைத்த வண்டுகளின் உதவியை நாடினர், அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள். அதன்படி, வண்டுகளின் கால் அமைப்பு இயங்கும் விதத்தைக் கவனித்து, அதுபோலவே ரோபோ கம்பிகளை வடிவமைத்தனர். அதனை மூளையின் நெளிவுகளுக்குள் விரும்பியபடி செலுத்தி, சிக்கலான இடத்திலும் கூட சிகிச்சை அளிக்கமுடியும் என்று உறுதியளித்தனர்.

மேலும், பன்றியின் மூளையில் இந்த கண்டுபிடிப்பைச் சோதித்தபோது, பல சிக்கலான சிகிச்சை முறைகளையும் மருத்துவர்கள் வெற்றிகரமாகச் செய்ததாகத் தெரிவித்தனர். இந்த சிகிச்சை முறை நடைமுறைக்கு வந்தால் மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டோர் மற்றும் பக்கவாதம் ஏற்பட்டோர் பெரிதும் பயனடைவர் என்று ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

“கம்யூனிஸ்டுகள் ஒருபுறம் நடைமுறை ரீதியில், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தொழிலாளி வர்க்கக் கட்சிகளில், மிகவும் முன்னேறிய, மிகவும் உறுதி வாய்ந்த பிரிவாக, மற்றவர்கள் அனைவரையும் முன்னோக்கி உந்தித் தள்ளுகின்ற பிரிவாக உள்ளனர். மறுபுறம், தத்துவ ரீதியில், கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்கத்தின் பெருந்திரளினருக்கு இல்லாத ஓர் அனுகூலத்தை, அதாவது, பாட்டாளி வர்க்க இயக்கத்தின் திசைவழியையும், நிலைமைகளையும், இறுதியில் ஏற்படும் பொதுவான விளைவுகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அனுகூலத்தைப் பெற்றுள்ளனர்.”

**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை: மார்க்ஸ் – எங்கெல்ஸ்**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

பாரதூரத்தன்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

எனவே, இன்று ஆட்சியில் இருக்கும் சிறீலங்கா பொதுஜன பெரமுன மட்டுமின்றி வேறெந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. சில வேளைகளில் அத்தகைய கட்சிகளின் ஆட்சியில் இப்போதிருப்பதை விட நிலைமை இன்னும் மோசமாகவும் இருக்கலாம்.

உண்மையில் நாட்டின் இத்தகைய நிலைமைகளுக்கு அடிப்படைக் காரணம் நடைமுறையில் இருக்கும் ஏற்றத்தாழ்வான முதலாளித்துவ ஆட்சி முறையே. நாட்டை ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளும் அந்த அமைப்பு முறையை மாற்றுவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை. அவர்கள் செய்யவும் மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியம் கையளித்துச் சென்ற முதலாளித்துவ பாராளுமன்ற முறையையே தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வருகின்றனர். அதை அவர்கள் ஒருபோதும் மாற்றத் துணியமாட்டார்கள் என்பதோடு, விரும்பவும் மாட்டார்கள். நாட்டின் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் தமக்குள் ஐக்கியப்பட்டு, ஒரு சரியான தலைமையை கட்டியெழுப்பி, பரந்துபட்ட வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே நாட்டில் ஒரு அடிப்படையான அரசியல் மாற்றத்தையும் சமூக மாற்றத்தையும் கொண்டுவர முடியும். இதைத்தவிர, இலங்கையின் இன்றைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேறு ஏதும் குறுக்கு வழிகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

# காந்தி தொடங்கிய கல்விப் பண்ணை



பெலிக்ஸ் டொபோல்ஸ்கி வரைந்த ஓவியம்

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் தங்கியிருந்தபோது, இந்தியர்களின் உரிமைக்காகப் போராடினார். ஜோகன்னஸ்பேர்க்கிலிருந்து 22 கிலோமீற்றர் தொலைவில், 'டால்ஸ்டாய் பண்ணை'யை நிறுவினார் காந்தி. 1910 ஆம் ஆண்டு மே 20ந் திகதி இப்பண்ணையைத் தொடங்கினார். அப்போதைய கல்விமுறையில் காந்திக்கு நம்பிக்கையில்லை. வாழ்வியலோடு தொடர்புடைய கல்வியை அப்பகுதி சிறுவர்களுக்குக் கற்பிக்கும் பணியை டால்ஸ்டாய் பண்ணையில் மேற்கொண்டார்.

'டால்ஸ்டாய் பண்ணை' தொடர்பாக, காந்தியின் சுயசரிதையான 'சத்திய சோதனை'யிலிருந்து ஒரு பகுதியின் சுருக்கம்:

'ஜாதி, மத, இன வேறுபாடு இல்லாமல், அவரவர் பணிகளை அவரவரே மேற்கொள்ள வேண்டும் என்பது இப்பண்ணையின் சிறப்பு. மேலும் பண்ணைக்கு, வெளியிலிருந்து உபாத்தியாயர்களை (ஆசிரியர்களை) இறக்குமதி செய்யவேண்டியது அவசியம் என்றும் நான் கருதவில்லை. அப்பொழுது நடைமுறையிலிருந்த கல்வி முறையிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. அனுபவத்தினாலும், சோதனைகளினாலும், உண்மையானதொரு கல்வி முறையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணமும் எனக்கு இருந்தது. சிறுவர்களில் ஒவ்வொருவருக்கும் பயனுள்ள ஏதாவது ஒரு கைத்தொழிலைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பது என் நோக்கம். ஸ்ரீ கால்லென்பாக் என்பவர் செருப்புத் தைக்கும் தொழிலைக் கற்றுக்கொண்டு வந்தார். இந்த வித்தையை நானும் கற்றுக்கொண்டு, அதைக் கற்றுக்கொள்ள விரும்பியவர்களுக்கும் சொல்லிக் கொடுத்தேன். ஸ்ரீ கால்லென்பாக்குக்குத் தச்சுவேலையிலும் கொஞ்சம் அனுபவம் உண்டு. அந்தத் தொழிலறிந்த மற்றொருவரும் பண்ணையில் இருந்தார். ஆகவே, தச்சுத் தொழில் கற்றுக்கொடுக்கவும் ஒரு சிறு வகுப்பு ஆரம்பித்தோம்.

சமையல் வேலையோ, அநேகமாக எல்லாச் சிறுவர்களுக்குமே தெரியும். தமிழும் உருதும் சொல்லிக் கொடுப்பதை நான் ஏற்றுக் கொண்டேன். எனக்குத் தெரிந்த சொற்பமான தமிழ், என் கப்பல் பிரயாண காலத்திலும், சிறையிலும் கற்றுக் கொண்டதாகும். ஜி. யு. போப் எழுதிய சிறந்த தமிழ்ப் பாடப் புத்தகத்தைத் தவிர வேறொன்றையும் நான் படித்ததில்லை. (ஜி. யு. போப் George Uglow Pope, பிறப்பு: ஏப்ரல் 24, 1820. இறப்பு: பெப்ரவரி 11, 1908. கனடாவில் பிறந்து கிறிஸ்தவ சமய போதகராகத் தமிழ் நாட்டிற்கு வந்து 40 ஆண்டு காலம் தமிழுக்கு சேவை செய்தவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்) தமிழ்ச் சிறுவர்கள் எல்லோரும் தென்னாப்பிரிக்காவில் பிறந்தவர்கள். ஆகையால், அவர்களுக்குத் தமிழ் அவ்வளவாகத் தெரியாது. தமிழ் எழுத்துகள் அவர்களுக்குக் கொஞ்சமும் தெரியாது. ஆகவே, அவர்களுக்கு நான் தமிழ் எழுத்துகளையும் ஆரம்ப இலக்கண விதிகளையும் சொல்லிக் கொடுக்க வேண்டியிருந்தது.

தமிழில் பேசுவதில் என்னை எப்பொழுதும் தாங்கள் தோற்கடித்துவிட முடியும் என்பதை என் மாணவர்கள் அறிவார்கள். ஆங்கிலம் தெரியாத தமிழர்கள் என்னைப் பார்க்க வந்தபோது, அம்மாணவர்களே என் மொழிபெயர்ப்பாளர்களாக இருந்தனர்.

நான் பொய்யனாக இருந்து கொண்டு, உண்மை பேசும்படி மாணவர்களுக்குப் போதிப்பது என்பது வீண் வேலை. தாம் கோழையாக இருக்கும் ஓர் உபாத்தியாயர், தம்மிடம் படிக்கும் மாணவர்களை வீரர்களாக்கிவிடவே முடியாது. புலனடக்கம் என்பதே தெரியாத ஓர் ஆசிரியர், புலனடக்கத்தை மாணவர்களுக்குப் போதித்து விடவும் முடியாது. ஆகையால், என்னுடன் இருக்கும் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் நானே எப்பொழுதும் உதாரண பாடமாக இருக்கவேண்டும் என்பதைக் கண்டேன். இவ்விதம் அவர்கள் என் உபாத்தியாயர்களாயினர். அவர்களுக்காகவேனும் நான் நல்லவனாக இருந்து நேர்மையுடன் வாழ வேண்டும் என்பதை நான் கற்றுக்கொண்டேன். டால்ஸ்டாய் பண்ணையில் இருந்தபோது, எனக்கு நானே அதிகமாக விதித்துக் கொண்ட கட்டுத்திட்டங்களும் புலனடக்கங்களும், பெரும்பாலும் என் பாதுகாப்பிலிருந்த குழந்தைகளுக்காகவே என்றும் சொல்லலாம்.'

**காந்தியை வரைந்த ஓவியர்**

மகாத்மா காந்தி மீது எல்லோரையும் போல், ஓவியர்களுக்கும் தனி பிரேமை உண்டு. அவரை விதம் விதமாக வரைந்து தங்கள் எண்ணங்களுக்கு உருவம் கொடுத்துள்ளார்கள். அதில் முக்கியமானவர் பெலிக்ஸ் டொபோல்ஸ்கி (Feliks Topolski) என்ற போலந்து நாட்டு ஓவியர். இவர், மன்னர் ஐந்தாம் ஜார்ஜின் வெள்ளிவிழா கொண்டாட்டங்களை ஓவியங்களாகத் தீட்ட, இங்கிலாந்து வந்தவர். பின்னர், அந்நாடு காணும் போர்க்களங்களை ஓவியங்களாகத் தீட்டப் பணிக்கப்பட்டார்.

அப்படி இந்தியா வந்தவர், மகாத்மா மீது உள்ள அபிமானத்தால், அவரது பல்வேறு தருணங்களைத் தமது சொந்தப் பாணியில் கோட்டோவியங்களாக வரைந்துள்ளார். மேலே உள்ளது அவர் வரைந்த ஓவியங்களுள் ஒன்று.

# மதவெறி மற்றும் சாதிவெறி என்னும் நச்சுக்கலவை

**இ**ந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனக்கு மிகவும் பிடித்தமான "இரட்டை என்ஜின் வளர்ச்சி" ("double engine growth") என்னும் சொற்றொடரை மீண்டும் ஒருமுறை பயன்படுத்தி இருக்கிறார். உத்தரப்பிரதேசத்தில் அலிகாரில் ராஜா மகேந்திர பிரதாப் சிங் மாநிலப் பல்கலைக் கழகத்திற்கு அடிக்கல்நாட்டு விழா நிகழ்வில் கலந்துகொண்டபோதே, இவ்வாறு அவர் கூறியிருக்கிறார். இதன்மூலம் அவர் கூறவிரும்புவது என்ன என்பது மிகவும் தெளிவாகும். இது மதவெறி மற்றும் சாதிவெறி என்னும் நச்சுக் கலவையே தவிர வேறெதுவும் இல்லை.

உத்தரப்பிரதேச சட்டமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பதையடுத்து, நரேந்திர மோடி–ஆதித்யநாத் தலைமையின் கீழ் பா.ஜ.க இவ்வாறு மதவெறி–சாதிவெறி நச்சுக் கலவை என்னும் இரட்டை என்ஜினை இயக்கத் தொடங்கி இருக்கிறது. மேற்கு உத்தரப்பிரதேசத்தில் விவசாயிகள் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் பின்னணியில் நரேந்திர மோடியின் பேச்சு பார்க்கப்பட வேண்டும். இப்போது அவர் பேசும்போதும் இங்கே ஐந்தாண்டுகளுக்கு முன் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வர பயந்துகொண்டிருந்த நிலைமை இருந்ததாகக் கூறுவதற்குத் தவறவில்லை. இவ்வாறு பயப்படும் சூழ்நிலை இருந்ததால் பலர் தங்கள் மூதாதையர்களின் வீடுகளிலிருந்து ஓடிவிட்டார்கள் என்று பேசினார். பா.ஜ.க எம்பி, ஹூக்கும் சிங், 2016இல் 'சாம்லி மாவட்டத்தில் முஸ்லீம் கிரிமினல்களுக்குப் பயந்து நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் ஓடி விட்டார்கள்' என்று கூறிய பொய்யை எதிரொலிக்கும் விதத்திலேயே மேற்படி பேச்சு அமைந்திருந்தது.

### மதச்சார்பின்மையை உயர்த்திப்பிடித்த மகேந்திர பிரதாப் சிங்

மகேந்திர பிரதாப் சிங் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவது "ஜாட் சிரோமணி"க்கு அளிக்கப்படும் பாராட்டு என்ற விதத்திலும் இந்நிகழ்ச்சி தொடர்பாக வெளியிடப்பட்ட சுவரொட்டிகளில்



புகழ்மாலைகள் சூட்டப்பட்டன. மகேந்திர பிரதாப் சிங் ஒரு புரட்சியாளர்தான். அவர், இதர முஜாஹிதீன்களுடன் சேர்ந்து, 1915 இல் ஆப்கானிஸ்தானில் காபூலில் இந்தியாவிற்கான தற்காலிக அரசாங்கத்தை (provisional government) அமைத்தவர். அவர் அதன் தலைவராகவும், மௌலவி பரகத்துல்லா அதன் பிரதமராகவும் இருந்தார்கள். அவருடைய சோசலிச மற்றும் மதச்சார்பின்மை கண்ணோட்டம் இவர்களுடைய மதவெறி மற்றும் சாதி வெறி அடையாளங்களுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல. ஆனாலும் பா.ஜ.க ஆனது ஜாட் இனத்தாரின் மத்தியில் நல்லெண்ணத்தை எப்படியாவது பெற வேண்டும் என்பதற்காக, அவர்கள் (ஜாட் இனத்தவர்) அனைவரும் ஒட்டுமொத்தமாக வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய இச்சமயத்தில் இவ்வாறான நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது.

### முற்றிலும் பொய்

ஆதித்யநாத், வழக்கம்போல இப்போதும் தன் மதவெறி நஞ்சை கக்கி இருக்கிறார். ஒருசில நாட்களுக்கு முன்பு அலிகார் அருகே, குஷிநகரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் உரைநிகழ்த்தும்போது, இப்போது அனைவருக்கும் ரேஷன் பொருட்கள் கிடைப்பதாகவும், ஆனால் "2017க்குமுன் 'அப்பா ஜான்' ('abba jaan') என்று அழைக்கப்படும் முஸ்லீம்களுக்கு மட்டுமே கிடைத்து வந்ததாகவும்" பேசினார். இவ்வாறு முஸ்லீம்களுக்கு எதிராக மிகவும் குரூரமான விதத்தில் விஷத்தைக் கக்கினார். இது முற்றிலும் பொய்யான கூற்று. உத்தரப்பிரதேசத்தின் தரவுகள் அனைத்துமே எந்த அளவுக்கு முஸ்லீம்கள், அத்தியாவசியப் பணிகள் அனைத்திலும் மிகவும் மோசமான முறையில் உரிமைகள் பறிக்கப்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன.

இவ்வாறு இவர்கள் முஸ்லீம்களைத் தனிமைப்படுத்திடவும், இழிவானவர்களாகக் காட்டவும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கும் அதே சமயத்தில், உத்தரப்பிரதேச மாநில அரசாங்கமும், ஒன்றிய அரசாங்கமும் தாங்கள் அனைவருக்குமான வளர்ச்சித் திட்டங்களை ("சப்கா விகாஷ்") மேற்கொண்டு வருகிறோம் என்றும், அரசாங்கத்தின் நலத் திட்டங்களின் காரணமாக அனைத்துத்தரப்பு மக்களும் பயன் அடைந்து வருகிறார்கள் என்றும் தம்பட்டமடித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய அணுகுமுறையுடன் பா.ஜ.க தலைமையிலான அரசாங்கங்கள் அரசின் திட்டங்களை பிரதமரின் பெயரிலும் கட்சியின் பெயரிலும் தமதாக்கிக்கொள்ள முயல்கின்றன. நரேந்திர மோடியின் 71ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக, பா.ஜ.க மோடியின் படத்துடன் 14 கோடி ரேஷன் பைகள் விநியோகிக்கத் தீர்மானித்திருக்கிறது. உணவு தான்யங்களை அளிப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தைத் தங்கள் கட்சியின் தலைவரைத் துதிபாடுவதுடன் இணைத்திருக்கிறது. பா.ஜ.க வின் நிலப்பிரபுத்துவ சிந்தனை காரணமாக இந்திய மக்கள் அரசாங்கம் அளித்திடும் இனாம்களைப் பெறுபவர்களாகத்தான் பார்க்கப்படுகிறார்களே தவிர, அவர்கள் அனைவரும் சம உரிமைகளுடன் நடத்தப்பட வேண்டிய குடிமக்கள் என்று கருதி அவ்வாறு நடத்தப்படுவதில்லை.

**நன்றி: பீப்பிள்ஸ் டெமாக்ரசி (தமிழில்: ச.வீரமணி)**